V3 No. 25 19 Jun 1930.

C

N28KN
No. 3.25
189109

1250

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஹு ஜூன் மீ 19உ [No. 25.

பொருளடக்கம்.

1.	நிலயங்கம் (Leader).	481
2.	அப்பர் (வில் வித்தை) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.	483
3.	கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L.	484
4.	மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B L.	487
5.	தமிழ்ப்பாடம் (இலக்கணம்)	489
6	நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—5 பதிகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L.	491
7.	இலஞ்சிப் பாவை (மன்னனும் மாதும்) T. S. நடராஜபிள்ளை, B A., B.L	493
8.	வர்த்தமானம்	495
9.	அட்டவணை	496

கலாநிலயம்

கல்லாத பேர்களே நல்லவர்களோ!

8-SEP 1930

3

189109

மெய்க்கல்வியால் நலமொழிய ஒருபோதும் தீதில்லை யானாலும், இக்காலத்தில் கல்வியென்ற பேரால் நடைபெறுபாடங்களாலும், அவைகளைப் போதிக்கும் முறைகளாலும், படிப்பவர்தம் புல்லிய நோக்கங்களாலும், மக்களிற்பெரும்பான்மையோர் கெட்டவர்களாவதைக் கண்டுவருவதால், கெடுவதே கருமமெனின் பதினாயிரத்தி லொருவருக்குமேல் கெடாமலிருப்பதே நலமெனுங் கருத்தினாலே கலாநிலயம் இன்னவாறு இயம்பலுற்றது. இக்காலச்சர்வகலாசாலை தன்மக்கள்பால் தீவினையச்சமொன்றும் விளைத்ததாய்த் தெரியவில்லை. அழுக்காற்றினை அகற்றியதாய்க் காணவில்லை. ஒழுக்கத்தின்விழுப்பத்தை ஒருவர்க்கும் அளித்ததாய் அறிதற்கில்லை. இன்சொல் இயம்பவைக்கவில்லை. பெரியோரைப் பேணற்குப் பழக்கி வைக்கவில்லை. எதிர் மறையில் இவ்விதம் கூறுதல் ஒழித்து, இவைகளுக்கு மாறான குணங்களையே இக்காலக் கல்வி விளைவிக்கின்றதெனினுந் தகும். இன்றைக்குங் கூட, பள்ளிக்கூட வாயில்வழி ஒருநாளும் மிதியாதார், அடக்கம் ஒழுக்கம் வாய்மை பழிக்கஞ்சல் முதலிய நற்குணங்களில் மற்றவர்களைவிட ஓரளவு சிறந்திருப்பதே இதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணமாகும். பிறர்துயர்க்குப் பரிவுகூரும் பண்ணமைந்த மனத்தராய் மெய்ந்நெறி யின்மையில் காட்டமுடைய வாழ்க்கையில் இட்டுண்டு வாழ்பவர். படித்தவர்களில் எத்தனைபேர் என்று ஒவ்வொருவரும் தத்தமக்குத் தெரிந்தவர்களிலிருந்து எண்ணிக் கணக்கெடுக்கப் புகுங்கால், அவரவர் ஒரு கை விரல்களை அதிகம் என்றுரைக்கத் துணிவு மிக வேண்டியதில்லையே. மிகுதிபற்றி இவை கூறுகின்றோமென்பதை மறத்தலாகாது.

கணக்கில் பல பள்ளிக்கூடங்களும் சர்வ்கலாசாலைகளும் நிறுவவேண்டுமென்று மன்றாடுவார், "படிப்பினால் நன்மையுண்டு, ஆதலால் இது செய்தல்வேண்டும்" என்பர். ஆம், நன்மை என்பது எதுவென்றெண்ணிப் பேசுகின்றனர்? ஒருவரோ டொருவர் இகலி 'நீமுன் நான்முன்' என்று போட்டிவேட்டையாடிப் பணமும் அதிகாரமும் பறித்துக்கொண்டு அமைதியற்று உழல்கின்றதே நன்மை என்பது அவர் கருத்தாயின் ஒருகால் இக்காலப் படிப்பு அதற்கு உதவலாமோ, யாதோ! படித்துப் படித்து "முன்னுக்கு" வருவதென்பதன் பொருளெல்லாம் இதுதான். தானே தனக்குச் சான்றாய் நிற்கின்ற இதனை விளக்க உதாரணமும் விரிவுரையும் வேண்டா படிப்பினால் விழைகின்ற ஊதியமெல்லாம் இதுவேயாயின் வேறு நாம் விளம்புதற் கென்னுளது நடை முதலில் முடியும்வகை இன்னதேயாயினும், பாடசாலைப் பரிசளிக்குங் கோலங்களிலும், சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாக்களிலும் பிரசங்கங்கள் செய்வோரும், கல்வியைப்பற்றிக் கட்டுரைகள் எழுதுவோரும், பணமீட்டும் போட்டிக்கோர் கருவியாகவே படிப்பைக் கருதப்படாதென்றும், நடுநிலைமை நியாய

புத்தி, கண்ணோட்டம் முதலியவைகளை எய்துவிப்பதுதான் பள்ளிக்கூடங்கள் சர்வகலாசாலை அனைய கல்விநிலையங்களின் நோக்கமா யிருத்தல்வேண்டுமென்றும் வற்புறுத்திப் படிப்பின் நன்மை இதுவேயென எடுத்துக் காட்டுவார். தயிரைக் கடைந்தால் வெண்ணெய் வருமென்பது உண்மையே. ஆனால் என்ன! சுண்ணாம்புநீரைக் காட்டிக்காட்டி 'ஐய, தயிரே யிது தயிரே' என்று எவ்வளவு முறை அழுத்திச் சொல்லிக் கடைந்தாலும் பட்டவர் தொட்டவர் கையெல்லாம் புண்ணாதற் கூடுமன்றி வெண்ணைதான் திரண்டெழற் கொண்ணுமோ! எனின், நியாயம் நடுநிலைமை கண்ணோட்டம் முதலிய நற்குணங்கள், படித்தவர்களிடத்தில் காண்பது அரிதாயிருப்பது வியப்பன்று. இதனால், இக் காலப்படிப்பில் தேர்ந்தவர்களுக்குள் நல்லவர்களே இல்லையென்பது எம் கொள்கையன்று. இப் படிப்பினாலுங் கெடுக்கப்படா உயர்மரபின ரவரென் றுன்னுதல் வேண்டும். மற்று இப் படிப்புத்தான் அவர்களை நல்லவர்களாக்கியது என்று உரைக்க வருவார், அவ்வாறு உரைக்கத் துணியுமுன் இரண்டொரு விடயங்களை உற்றுநோக்கித் தெருளுதல் இன்றியமையாத தாகின்றது.

முதலில், 'நல்லவர்' என்று சொல்வதன் தன்மையை நாம் நிச்சயஞ் செய்துகொள்ளல் வேண்டும். களவுகொலை காமம் கள்முதலிய தீப்பழக்கங்கள்உடையோரைக் கெட்டவரென் றெளிதில் குறித்து விடுகின்றோம். ஆனால் நல்லவன் என்றழைக்கப்படுவதற்கு அவனிடத்தில் சில நற்குணங்கள் இருந்துதான் தீரவேண்டும் என்ற நியதி யில்லைபோல் அச்சொல்லின் பொருள் இக்காலத்தில் வழங்கலாகின்றது. "இன்னான் நல்லவன், திருடான், மதுவருந்தான், கொலை செய்திலன், காமுகனல்லன், வருவாய்க்குள் செலவு செய்து அயலறியாமல் வாழ்கின்றான். பொருளும் சிறிது சேர்த்திருக்கின்றான்,நல்லவன் இவன்" என்று ஏதும் ஐயமின்றி உரைக்கக்கேட்கின்றோம். மற்றுஞ் சிலர், "நான் எவ்விடத்தும் நல்லவன் என்ற பேரே எடுத்து வருகின்றேன். நான் யாரையும் வைவதில்லை. எல்லாரையும் 'மரியாதை' யாகப்பேசி அனுப்புவேன். வாயில்வந்தபடி பேசுவானேன், அவன் வழியில் மறித்து அடிப்பானேன்." என்றுசொல்லிக்கொள்வதைச் சிரமசைத்து ஏற்போரையுங் காண்கின்றோம். இவ்வளவோடு நின்றுவிடுமேல், இவ்வினத்தவரை 'கெட்டவரல்லார்' என்று குறித்தால் குறிக்கலாமேயன்றி 'நல்லவர்' என்று உரைப்பது எங்ஙனம் அமையும்! கெட்டவரல்லாதாரெல்லாம் நல்லவர் என்பதற் குரியா ரல்லர். நன்மையி னிலக்கண மனைத்தும் எதிர்மறை வாய்பாட்டி லடங்கிவிடாது ; உடன்பாட்டுக் குணங்களும் சில வேண்டும். தகவு, ஈகை, வாய்மை, கண்ணோட்டம் அனையவை வாய்த்தவொரு உத்தமனே நல்லவன் எனத்தக்கவன். இவைகளுக்கு ஏதுவாயிருக்குமாயின் இக்காலப் படிப்பில் நன்மையுளதென்னலாம் ; பதினாயிரம்பேரும் படிக்கவேண்டியவர்களே.

இனி, இக்காலப் படிப்பு இத்தகைய குணங்களை எய்துவிக் கின்றதோ, அல்லது அதனதற் கெதிர் குணங்களுக்கே ஆதாரமாகின்றதோ என்று சோதிக்க எளியதோர் வகையுளது. இவ்விந்தியாவில் இருக்கின்ற படிப்பினது அளவையும் படித்தவர்தம்தொகையையும்விட இங்கிலாந்தின் அளவுந் தொகையும் எத்துணையோ மடங்குஅதிகம் என்பதைக் காட்டிக் காட்டி இந்நாட்டினர் ஏங்குகின்றனர். அப்படிப்பின் மிகுதிக்கு ஏற்றபடி அங்கு நல்லவர்களும் அதிகம் என்று கணக்கெடுத்துச்சொல்வாரில்லை. அதுகிடக்க, இந்நாட்டு அரசியல்வாதிகளிற்பெரும்பாலோர் சாலப் படித்தவர்களே. இவர் உரைப்பனவும் செய்வனவும் நியாயமானவைகளாய் இருத்தல் வேண்டும். எனின் ஆங்கிலேய அரசாட்சி இங்கிலாந்தின் இலாபத்திற்காகவே நடத்தப்படுகின்றதென்றும், ஆங்கிலேயர் பொருளுக்கும் அதிகாரத்திற்கும் ஆசைப்பட்டு வர்த்தகத்தினாலும் வரிகளாலும் உத்தியோகங்களாலும் நாணயமாற்றுத் திட்டங்களாலும் இந்தியரை இரக்கமின்றி வறியராக்கிவருவது மல்லாமல் அடிமைகளேயாகவும் வைத்து மிகக்கொடிய அடக்குமுறைகளால் தம் அரசைச் செலுத்திவருகின்றனர் என்றும் மிக உரைத்துச் சுயராஜ்யம் வேண்டுவது நியாயமானதே என்று ஏற்படுகின்றது. இது நியாயமாயின், இவ்வாறு செய்பவரும் சுயராஜ்யம் கொடுக்க மறுப்பவரும் ஆகிய ஆங்கிலேய பார்லிமெண்டாரும் அவர்களுக்கு ஆதாரமாயிருக்கின்ற பத்திரிகைஆசிரியர்களும் மற்றுள பல பிரமுகர்களும், நடுநிலைமை கண்ணோட்டம் இரக்கம் நியாயம் முதலிய குணங்களற்ற சுயநயச் சனங்களாகத்தான் மதிக்கப்பட வேண்டுமன்றோ, ஆயின் அவர்கள் நல்லவர்களல்லர். மற்று, ஆங்கிலேயர்தாம் அதிகம் படித்தவர்களல்லரோ? பார்லிமெண்டு அங்கத்தினர்களெல்லாரும் சர்வகலாசாலைப் படிப்பின் எல்லையைக் கடந்தபெருங்கல்வியர்! அதனினும், இவைகளிற் சிறந்தன பிறவில்லை என்னுந் தொல்புகழ் வாய்ந்த ஆங்கிலேய தேயத்துப் பள்ளிக்கூடங்களிலும் சர்வகலாசாலைகளிலும் பயின்றவர். ஆதலின் அவர்கள் நல்லவர்களாகவே இருத்தல் வேண்டும். நல்லவர்களாயின்,இந்தியரை அவர் இன்று ஆள்கின்ற முறையும் சுயராஜ்யமளிக்க மறுப்பதும் நியாயமானவைகளே ஆதலும் வேண்டும். கேட்பவர்கள் கேட்பது நியாயமோ, சுயராஜ்யம் அவர் கொடுக்க மறுப்பது நியாயமோ. இரண்டிலொன்றே நியாயமாயிருத்தல் கூடும். இருதிறத்தோறும் படித்தவர்கள். இக்கட்டு இதனிற்கு என்செய்வது. மக்களெல்லாம் நல்லவர்களாக வேண்டுமென்பதே தம் நோக்கம் என்று பள்ளிக்கூடங்களையும் சர்வகலாசாலையையும் நிறுவுதற்கு முயல்கின்றவர்களில் பெரும்பகுதியார் அரசியல்வாதங்களில் ஊடாடுபவர்களாகவும் இருக்கக் காண்கின்றோம். எனின், இவர்களது கொள்கையின்படி நியாயம் நடுநிலைமை இரக்கம் முதலிய குணங்கள் குறைந்திருக்கின்ற ஆங்கிலேயர்களளவு இந்தியாவிலும் படிப்பவர்தொகை அதிகரிக்கவேண்டுமென்று வாதிப்பதெல்லாம் விபரீதமாய்த் தோன்றுகின்றதே.

வாய்மையாதெனில், இக்காலப் படிப்பு ஒருவரையும் நல்லவராக்குவதற்கு ஏற்றதாய் அமைந்ததன்று. எழுதப்படிக்கத் தெரிந்துகொள்வதும், பாஷைப்பயிற்சியும், இரசாயன எந்திரச் சாதனங்களை யறிவதும் கல்வியாகா. உலகப்பொருள் ஊதியம் யாதுமின்றி ஓதுவித்த முற்கால ஆசிரியர்களுக்கும் இக்கால உபாத்திமார்களுக்கும் இடைகிடக்கும் வேற்றுமையை அளக்கப் புகுவதும் மிகை. வாழ்க்கைப்போட்டியில் அலைப்

புண்ணும் இவ்வுபாத்தியர், அவ் வாழ்க்கைப்போட்டியில் வெல்வதற்கென்று தீட்டித்தரும் ஒரு கருவி போன்ற இப்படிப்பைக் கைக்கொண்டமாணவர் கண்ணோட்ட முடையராய் நீதியை நோக்குகின்ற மனத்தராய் வளர்தல் அருமையே என்னல் வேண்டுமோ. இப் படிப்பின் மோசத்தையுங் கடந்து நல்லவர்களாய் இருப்பவர்களிலும் அதனால் கெடக்கூடியவர்களே அதிகமாகையால் பதினாயிரத்தி லொருவர் படித்திருத்தலே சாலுமென்றசெப்பினு மது பிழையன்று. பிழையாமெனில் எம்மிற் பெரிதுவப்பார் பிறரில்லை.

அப்பர்

8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

8. வில் வித்தை.

[464-வது பக்கத் தொடர்ச்சி]

(ii) வில்லின் சிறப்பிற்குக் காரணம்

தற்கால நாகரிகத்தில், புலி முதலிய மிருகங்களையும் நெருங்கிச்செல்லவொட்டாப் பகைவர்களையும், தூரத்தினின்று அழிக்கவல்ல கருவியாக எண்ணப்படுகின்ற சேய்மைத்துப்பாக்கியென்னும் ஆங்கில ரைபில் (Rifle)கருவிபோல் பண்டைக்காலத்தில் வில்லைப் பயன்படுத்தினர். இதனால் எய்யப்படும் கணைகள் தீயை நுனியிற் பெற்றவையாம். அதாவது, அவைகளின் முனை, கொடிய விஷங்களில் தோய்க்கப்பட்டு எதிரியைத் தாக்கியமாத்திரத்தில் உயிரை வவ்வும் தன்மையைப் பெற்றிருந்தன. இவ்வழக்கத்தினை யனுசரித்தே சிவபெருமான் திரிபுரசம்ஹார காலத்தில் எரிமுனை யம்பு தேவர்கள் ஏற்படுத்தினர் போலும்!

எரியார் கணையா லெயிலெய் தவனே
விரியார் தருவீழ் சடையா யிரவில்
கரிகா டலினாய் கழிப்பா லையுளாய்
உரிதா கிவணங் குவனுன் னடியே. சம்பந்தர்.

மூவாத மூக்கப்பாம் பரையிற் சாத்தி
மூவருரு வாய முதல்வ ரிந்நாள்
கோவாத வெரிகணையைச் சிலைமேற் கோத்த
குழகனார் குளிர்கொன்றை சூடி யிங்கே
போவாரைக் கண்டடியேன் பின்பின் செல்லப்
புறக்கணித்துத் தம்முடைய பூதஞ் சூழ
வாவா வெனவுரைத்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.

திருவலம்புரம், திருத்தாண்டகம் 4.

தாக்கிய மாத்திரத்தில் எரிமுனையால் ஆவி கொள்ளுந் திறன்மாத்திரமன்று. ஒருநொடியில் கண்ணிமைப்பதன்முன் "சிலை நவின்ற" கணை, பகைவனைத் தாக்கும். இதுவே வில்லாளியின் கலைவன்மையாம்.

எய்தானைப் புரமூன்று மிமைக்கும் போதில்
இருவிசும்பில் வருபுனலைத் திருவார் சென்னிப்
பெய்தானைப் பிறப்பிலியை யறத்தி னில்லாப்
பிரமன்றன் சிரமொன்றைக் கரமொன் றினால்
கொய்தானைக் கூத்தாட வல்லான் றன்னைக்
குறியிலாக் கொடியேனை யடியே னாகச்
செய்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே.

திருநாகேச்சரம் - திருத்தாண்டகம் 8.

சிலை வளைந்தது என்றால் அம்பும் பாய்ந்து பகைவன் அழிந்தான் என்னும் பொருள் பொருந்தும்:—

குனிந்த சிலையாற் புரமூன் றெரித்தா யென்றும்
கூற்றுதைத்த குரைகழற்சே வடியா யென்றும்
தனஞ்சயற்குப் பாசுபத மீந்தா யென்றும்
தசக்கிரீவன் மலையெடுக்க விரலா லூன்றி
முனிந்தவன்றன் சிரம்பத்துந் தாளுந் தோளும்
முரணழித்திட் டருள்கொடுத்த மூர்த்தியென்றும்
கனிந்துமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

திருக்கன்றாப்பூர் - திருத்தாண்டகம் 10.

மலைமகளைப் பாக மமர்ந்தார் தாமே
வானோர் வணங்கப் படுவார் தாமே
சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார் தாமே
சரணென் றிருப்பார்கட் கன்பர் தாமே
பலபலவும் வேடங்க ளானார் தாமே
பழனைப் பதியா வுடையார் தாமே
சிலைமலையா மூவெயிலு மட்டார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே.

திருவாலங்காடு - திருத்தாண்டகம் 2.

ஆகையால் தற்காப்புக்கும், தன்னைச் சரணடைந்தோரைக் காப்பதற்கும் வில்லும்அம்புமே பண்டைக் காலத்தி லின்றியமையாக் கருவிகளென வெண்ணப் பட்டன. இதனை அடியிற்காணும் அப்பர் பாசுரங்கள் விளக்கும்.

காப்பதோர் வில்லு மம்புங் கையதோ ரிறைச்சிப் பாரம்
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத் தூயவாய்க்கலசமாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே.

திருக்குறுக்கை வீரட்டம் - திருநேரிசை 7.

மலைமகடங் கோனவனை மாநீர் முத்தை
மரகதத்தை மாமணியை மல்கு செல்வக்
கலைநிலவு கையானைக் கம்பன் றன்னைக்
காண்பினிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை
விலைபெரிய வெண்ணீற்று மேனி யானை
மெய்யடியார் வேண்டுவதே வேண்டு வானைச்
சிலைநிலவு காத்தானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன் றினைச்சென் றடைந்தே னானே.

திருமாற்பேறு - திருத்தாண்டகம் 3.

வில்லுடன் போர்செய்வது, நவீனநாகரிகத் துப்பாக்கிப் பீரங்கித் திருட்டுப்போர்கள்போ லிராமல், எதிரியின் குணங்களை யறியவும் சுத்தவீரத்தன்மை விளக்கவும் பண்டைக்காலத்தில் பயன்பட்டது. இதனைத் திருநாவுக்கரசுநாயனார் பரமன் பார்த்தனுட

ணடர்த்துப் பாசுபதமீந்த சரிதையை உட்கொண்ட பாசுரங்களிற் சிறிது குறிப்பிடுகின்றார்:—

பார்த்தனோ டமர்பொருது பத்திமை காண்பர் போலும்
கூர்த்தவா யம்பு கோத்துக் குணங்களை யழிவர் போலும்
போர்த்துமோ ராவ ராழி யம்பொடுங் கொடுப்பர் போலும்
தீர்த்தமாம் பழனை மேய திருவாலங் காட னாரே.

திருவாலங்காடு - திருநேரிசை 5.

மெய்யம்பு கோத்தவிசயனோ டன்றொரு வேடுவனாய்ப்
பொய்யம்பெய்தாவமருளிச்செய்தாய் புரமூன்றெரியக்
கையம்பெய்தாய் நுன்கழலடிபோற்றாக் கயவர்நெஞ்சில்
குப்பம்பெய்தாய் கொடிமாமதில்சூழ்கச்சிமேயகம்பனே

திருக்கச்சியேகம்பம் - திருவிருத்தம் 3.

சுத்தவீரனுக்கு வில்லும் அம்பு மிருந்தால் வேறு படைக்கலம் வேண்டா. பார்த்தன் பெற்றிருந்ததும் வில்லும் அம்புமேயாம். இராவணனை வென்ற *

* வில்லிமையி னல்விறல ரக்கனுயிர்
சேற்றவனும் வேத முதலோன்
இல்லையுள தென்றிகலி கேடவெரி
யாகியுயர் கின்ற பரனார்
எல்லையில் வரைத்தகடல் வட்டமு
மிறைஞ்சிநிறை வாச முருவக்

போரில் இராகவன் பெற்றிருந்ததும் வேறு படைக்கலமன்று. இவ்விருவரும் துறவறம் பூண்டொழுகும் காலங்களில் இப்படையைப் பெற்றிருந்தாரெனின், வைதீக நிலையில் ஒழுகுவோர்க்கும், இப்படைக்கலம் வழங்கல் மறமன்று. தக்கனது யாகத்தை அழித்த காலை வீரபத்திரமூர்த்தியும் வில்லும் அம்பும் கையிற்கொண்டு தக்கனையுந் தலையரிந்து தேவகணங்களையும் தொலைத்தாரெனின், வில்லின் சிறப்பு மனிதர் அறியாரோ?

இதன்றியும் இப்படையால் எதிரி நெருங்கவொட்டாமல் அடித்துத் துரத்தலாகும். இக்கலை முதிர்ச்சியால் இராமலக்குமணரும், அர்ச்சுனனும் திரண்ட சேனாசமுத்திரங்களை ஒரேவில்லுடன் வெல்லலானார். யாவரையும் வெல்ல மன்மதனும் கருப்புவில் லேந்தினன். எனவே வில்லாயுதம் எக்காலத்திலும் எத்தன்மையோரும் பயன்படுத்தக்கூடியதாய் முற்காலத்தில் வழங்கிவந்ததால், அதனையே படைக்கலங்களில் முதலாய்ப் பண்டைத்தமிழர் கொண்டாடினர்.

கொல்லையி விளங்குறவர் தம்மயிர்
புலர்த்திவளர் கோகரணமே- சம்பந்தர்

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[470வது பக்கத் தொடர்ச்சி]

கலையினருமையை யுயர்வுற வமைத்தலிற் காண்க.

நம்புதற் கரிய சிலவற்றை, நாடக நவிற்சியின் நயந் தெரிந்தவர்கள் நம்பித்தான் தீரவேண்டும். இளஞ் சிறுனிராகவன் பண்டைநாள்பாணிவில்லுண்டையால் கூனியை அயோத்தியில் புடைத்தசெய்தி தென்னிலங்கைவரையில் பரவுமேனும், மற்றைநாள் அவன் முடிபுனைதற் கிருந்த மாற்றம் கோத்தேவி கைகேசி அறிந்ததில்லையாம். நகரெலா முவகையாற் கிளர்ந்ததோர் அமலைக்கோ அளவில்லை. எனினும் அமளியிலெய்திக் கைகேசி கண்படைகொள்ளுமுன் உறங்கிய காதினள் ஆதல் வேண்டும். கங்கையஞ் சடைமுடியண்ணல்தன் நெடுஞ்சிலையை இச்செம்மல் செகுத்த நாள், வேரிடைக் கிடந்தநாகம் வெருவவும், என்னிது வெனத் தயரதன் அயிர்க்கவும், அன்னதோ வென வெறிமழுவாளவன் அழலவும் எழுந்தவச் சேவகப் பேரொலி, அயலொரு கன்னிமாடத்தமர்ந்த சீதை தன் செவியினைச் சார்ந்திலதாக, நீலமாலை சென்றுரைக்கும்வரை அந்நங்கை ஒன்றும் அறிந்திலள் என்றதனை யொக்குமிது கம்பர் நூலிற் பயில்வோர்க்கு யாதும் புதுமையன்று.

கைகேசிக் கிதனை உணர்த்திட நினையா மன்னவன் நெஞ்சினிற் கரந்த வஞ்சனையொன் றுளதோவென அயிர்த்தற் கிடமிலது. கௌசலைக்கு மவன் கூறினனலன். உறுவதறிந்த மங்கையர் நால்வர் களிமிகச் சிறக்கப் பண்ணடையின்றியே ஆடியும் பாடியு மவள்பால் ஓடி, "நின்னெடும் புதல்வனை நேமியான் தொன்னெடும் முடி சூட்டுகின்றான்" என்றுரைத்திரார் என்னின் கௌசலைக்கு மொன்றுந் தெரிந்திராது. இன்னபடி செய்வார் சிலதியர்சிலர் கைகேசிக்குமேன் வாய்த்திலரென் றறியோம். வைகலும் வைகலும் விழவொலியறு வம் மல்லல்தொன்னகர்வாய் அன்று நிகழ்ந்தன வொன்றும் புதுமையன்றெனும் பான்மையில் கைகேசியேசென் றெவரையும் வினவினாளல்லள் போலும். மற்று, மந்தரைமாத்திரம் ஐயுற்றுத் தெளிந்தவா றென்னென்றயிர்க்கலாம். கம்பரிதனைக் கழறாது விட்டனர். வான்மீகமுனிவருக்கு, இதனை விளம்பவேண்டியது இன்றியமையாத தொன்றெனத் தோன்றிற்று. நகரணிகோலம் அவளுக்கு வியப்பைத் தந்ததாம். ஆயினும் ஆழ்ந்திதனை ஆராயவேண்டுமென அவளை வற்புறுத்திய தோற்றம் வேறு. அயல்நின்ற மற்றோர் தாதியை, "அடி, அதோ பார், இராமருடைய தாயாகிய கோசலையானவள் வெகு ஆனந்தத்துடன் எல்லாச் சனங்களுக்கும் பணத்தை வாரிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றாளே! அவள் எப்பொழுதும் பணத்தை இறுகப் பிடிப்பவளாயிற்றே! இன்று அவள் இப்படிச் செய்வதற்குக் காரணம் என்ன?.... இன்று மகாராஜா என்ன காரியம் செய்யப்போகின்றார், சொல்?" என மந்தரை கேட்டு அறிந்தனள் என்னும் வடமொழிமுதனூல். வளநகர் விழவேயன்றிக் கோசலையின் கொடையும் விபரிதமென நினைக்க வைக்கின்ற திவ் வாசகம். வள்ளல் இராமனைப் பயந்த அன்னையை யோர் வச்சையளாக்கிப் பின் கூனிக்கு அறிவுறுத்தினர் முனிவர். கொடுமனக் கூனிசொல் கொள்ளத் தகுந்ததோவெனில், அம்மொழி கேட்ட மற்றவளுமன்றோ மலைந்தொன்றும் மறுத்துரைக்காமல் வாளாவிருந்தாள். உலகெலா மீன்றானை முன் ஈன்றானைத் தன் மணிவயிறுவைத்து ஈன்றாளிக் கோசலையின் உலோபம் உலகறிந்ததொன் றெனும்படி இதனு

லாயிற்று. 'புன்மனக் கூனியின் பொய்மையே இது, மற்றவளும் மடமையால் மறுத்திலள்' என்று நாம் சிறிதளந் தேறினாலன்றிக் கௌசலையின் பெருமையைக் காக்கும்வகை வேறில்லை. மற்று, இழுதையர் ஏதிலார் யாவர்நாவிலும் பழுதுரை எழுதலாற்றா மேன்மைக் கிறைவியாயன்றோ கோசலை யாதல்வேண்டும். எனினும், வான்மீகமுனிவரது கதைமுறை அமைந்தவண்ணம், 'பரதனுக்கோ இப்பேரரசு போவது' என்று பிற்றைநாள் அரற்றநிற்கும் கோசலை, 'பணத்தை இறுகப்பிடிக்கும்' குணத்தளாதலை இங்குக் குறிக்கவேண்டிநேர்ந்ததும் பொருத்தமுடையதாகலாம். கௌசலையின் உலோபமும், அவள்முன் சென்று தன்னழகைக் காட்டிக்காட்டிமதர்த்த கைகேசியின் தருக்கும் வடநூற்சித்திரத்திற் கிணங்கினுமிணங்குக. சிறியன மறந்துஞ்சிந்தியாமல் உன்னுவார் எண்ணமெல்லாம் கடந்துயர்ந்ததோர் அரங்கின் மீமிசைத் தன் கதையை நிகழ்த்திவைக்கவேண்டுமெனு மவாவும் அவ்வவாவிற்குரிய ஆற்றலும் உடைய கம்பர்பெருமான் முதனூலின் வழிபற்ற இங்கு நேர்ந்திலர். "எனக்கே னித் தீராத தீங்கிழைத்தாய்" என நோவதனினும், "நினக்கே னிப்பழி சூழ்ந்து கொண்டனை" என்று தன்னைக் கொன்றாற் கிரங்கிய பெருமையால் வாலியையும், "நாசம் வந்துற்ற காலை நல்லதோர் பகையைப்பெற்றேன்" என்று முதற்போர் தோற்று நின்றநாள் இயம்பிய தகவினால் இராவணனையும், "பிறர்மனை நோக்குவோமை உறவெனப் பெறுதி போலாம்" என்று இராமன்பால் சேர்ப்பிக்கவந்த வீடணனைத் தகைவானுய்த் தன் மூத்தோன் இழைத்த தீத்தொழிலில் தன்னையும் உளப்படுத்தி விளம்பிய பெருந்தன்மையால் கும்பகர்ணனையும் உயர்த்திவைத்த கம்பரோ, கூனியின் வாயாலேனும் உலோபத்தால் கோசலையையும், செருக்கினால் கைகேசியையும் தாழ்த்திவைப்பார்!

கோசலையும் கைகேசியும் இகல்தெரிய ஒருவரையொருவர் இழித்துரைக்குஞ் சொற்களொன்றும் கம்பர்தம் நூலினுள் கேட்கவில்லையாயினும், அவ்விருவரும் நெருங்கிமிகப் பயில்தரு காட்சியுங்காணவில்லை. வந்துரைத்த மங்கையர் மொழிகேட்ட முதற்றேவி,

......................அரும்பெற லாரமும்
நன்னிதிக் குவையு நனிநல் கித்தன்
துன்னு காதற் சுமித்திரை யொடும்போய்
மின்னு நேமியன் மேவிட மேவினாள்

என்றுகம்பர் குறித்திருத்தலால் கைகேசியுடன் அளவளாவி அவளையும் அரசன்பால் அழைத்தேக நினைத்திலள் என்பது தெரியலாகின்றது. எனினும், கைகேசியைப் பற்றறப் பகைத்திவள் வெறுத்தனள் என எண்ணிற் பிழையாம். கைகேசியும் கோசலையும் ஒருகால் உரையாடலின்றித் தனித்தனிவைகினா ராகலாமெனினும், ஒருவரையொருவர் வியந்தனர், விரும்பினர், நலமுற விழைந்தனர். 'பரதனுக்கே பட்டம்' என்று இராமனால் உணர்ந்த கோசலை, 'நின்னினும் நல்லன் பரதன்' எனத் தாழாது தயங்காது எதிருரைப்பாள். "அடவிவாய் அடையுமாறு ஆணையிட்டனன் அரசன்" என்றபோதும் அவள், 'வஞ்சமோ மகனே' என்றயிர்த்தாளேனும் மாற்றவள் சூழ்ச்சிஇது வென்று மனத்திற் கொண்டிலள். மாய்வான் கிடந்தமன்னனைக் கைகேசியின் மனையிற் கண்டு உற்ற துணர்ந்தபின்னும் அவளை வைதிலள், பழித்தாளல்லள், வெறுத்தொருசொல் விளம்பினாளல்லள். இவ்வணமே, அழுக்காறாட்டுவிக்கும் கருத்தினளாய் மந்தரை, "வாழ்ந்தனள் கோசலை மதியினால்" என்று வற்புறுத்தியபோது "மன்னர் மன்னனையே மகிழ்நனாகவும் பரதனையே மைந்தனாகவும் பெற்றுள அவட்கு என் இதன்மேல் எய்தும் வாழ்வு" என்று ஏமுற்று இயம்பிய நன்மையளே இக்கைகேசியு மாகின்றாள். பின்வரும் நாட்களிலும், இவ்விரு அரசியர்க்கிடை பழிச்சொல் பாய்ந்ததென்பது கம்பர் நூலினுள் பார்க்கப்படாது.

இன்னதோர் தன்மையில் அரண்மனை மாதரார் அமையுமெல்லை இராவணன் இழைத்துள் கொடுமையின் வடிவுபோன்ற மந்தரைவந் தவர்க்கிடையே தோன்றினாள். பிறந்தகத்துச் சீர்தனமாய்க் கைகேசிக்கு நல்கப்பெற்றவ ளிவள் என்பது ஒருவாறு தெரியலாகின்றது. தோழியோ மற்று, வயதுவாய்ந்த ஒரு தாதியோ இவள்நிலை என ஐயமின்றித் தேர்தற் கியலவில்லை. எவ்வாறாயினும், பேதையென்றும் பித்தியென்றும் கைகேசியை இடித்துரைக்கும் உரிமையை மேற்கொண்டனளிக் கூனி.

இன்னவள், பாற்கடல்படு பவளவல்லிபோல் பொங்கணைமேற் கிடந்த கேகயன் மடந்தையின்பால் எய்தி, செய்தவப் பெருமையால் உவமையாம் செல்வம்பெற்ற தாமரையன்ன அவள் செம்பொற் சீறடியினைக் கைகளிற் றீண்டலும், அதனை உணர்ந்த கைகேசி கண்க ளின்னும் விழிக்கா முன்னம், இக் காலக்கோளனாள்

அணங்குவாள் விடவா வனுகு மெல்லையுங்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள்
பிணங்குவான் பேரிடர்பிணிக்க நண்ணவும்[போல்
உணங்குவா யல்லைநீ யுறங்குவா யென்றாள்

[துன்புறுத்துகின்ற வாளைப்போன்ற விடப்பற்களையுடைய பாம்பாகிய இராகு நெருங்குகின்றவரையிலும் தன் குணம்கெடாது ஒளிவீசுகின்ற குளிர்ந்த வெண்மையான சந்திரனைப்போல, உன்னைப் பின்னிச் சூழும் பெருந் துன்பம் கட்டவருகின்றதானாலும் அதற்குநீ வாட்டமடையாமல் உறங்கிக்கிடக்கின்றாயே, என்றனள்]

தக்கதே இவ்வுவமை. வேறொருகருத்தி லவள் உரைத்தாளானாலும், அணுகுகின்ற விடவாள அவளேயாய் முடிகின்றாள். "உன்னுடைய வாழ்வெல்லாம் பாழாக்க நான் வருகின்றேன் என்பது உணராமல் உறங்குகின்றனை, பேதாய்" என்னுமிப் பொருள் மேல்விளைவது நோக்கின் பொருத்தமுடையதாகும். ஓராது ஓர் உண்மையையே கூனி இவ்வுவமையால் உரைக்கலாயினாள். வாய்ப்புள்ளாய் முடிந்த இவ்வுவமையை

வெவ்விட மனையவள் விளம்ப வேற்கணாள்
தெவ்வடு சிலைக்கையென் சிறவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறு மறந்தி றப்பலர்
எவ்விட ரெனக்குவந் தடுப்ப தீண்டென்றாள்

[கொடிய விடம்போன்ற கூனி சொல்லி நிற்கவும் வேல்போன்ற கண்களையுடைய கைகேசி, "பகைவரை வெல்லும் விற்களைத் தாங்கிய என்மைந்தர் செம்மையானவர்கள். அவ்வவர்க்குரிய வழிகளில் ஒருபோதும் அறத்தினின்று பிறழாமல் ஒழுகுகின்றனர். எனின் எனக்கு எவ்வகைத் துன்பம்வந் திப்பொழுது எய்தக் கூடும்" என்றனள்]

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்" என்ற குறளினை நினைவிற் கொண்ட உறுதியாற் கைகேசி இதனைக் கூறி

யிருத்தல்வேண்டும். புதல்வர் நால்வருள்ளும் பொதுமைநீக்கிப் பின்னரும் அன்னாள்,

விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிட ருண்டோ

என்றியம்பிய இக்கொள்கையோ, இனி யிவள் மனந்திரிந்து மாறுபடநிற்கும் நிலையினுக்கு இரக்கம் பெரிதூட்டும் சூழ்ச்சிமிகவுடைத்து. சிறுவர் செவ்வியராயினும், அறந்திறம்பலராயினும், அவர்களிலொருவன் வேதமேஅன இராமனேயாயினும் கைகேசிதான் பேரிடருற்று வாழ்வெலா மிழக்கலாயினளே. தன்னலம் நாடி யிவள் அரிதின் செய்த சூழ்ச்சியெலாம் அவமேயாகி மாயாப்பழியில் மூழ்கியதே இவளடைந்த பேருயிற்று. "சொல்மரு மகற் பெற்றவர் அருந்துயர் துறந்தார்" என்று மகிழ்ந்த மன்னனை அம்மகனது சொன்மருமையே போழ்ந்தது. இங்கு இராமனைப் பயந்த கைகேசியும் கடக்கரு மிடருற் றுடைந்தனள். இராமனின் இலக்கவனின் பரதனின் சத்துருக்கனின் பழிபிறங்காப் பண்புடைய மக்கள் ஈங்கில்லை எனினும் அன்னவரை ஈன்றோரனைவரும் உற்றதொரு துயரிற்கோ ஒப்புமில்லை. இவ்வித விபரீதங்க ளிங்கு நிகழ்வதால், ஒருபோதும் பொய்க்காத வள்ளுவர் மொழியும் பொய்த்ததோ வென்னுமெண்ணம் நம்மனோர் மனத்தினி லிடம்பெறலாமாயினும் அதற்கோரமைதியு மங்ஙனே அயல்வரக் காண்கின்றோம் அறம்பொருளின்பமெனும் பாகுபாடுகளும் அவைகளி னிலக்கணமும் மாநுடர்க்கே உரிய முறைகளேயாகும். வேதமேயன இராமனென்றாள் வேதத்தின் முதல்வனே அவனெனும் உண்மையை உணராத கைகேசி. அவ் வேதமுதல்வனே கொடுங்கானம் நெடிதுசென்றும், பிரிவரிய சானகியைப் பிரியலுற்றும், துணைவரொடு தம்பியையும் தசமுகனொருமகன் செய் மாயத்திற் கிரையாக்கி இழந்தும், அமரருங் கண் டாற்றொணுத் துயருழந்து, "பொருந்தே னினிப் பொய்ப்பிற விக்கும் பொறையல்லேன்" என்று மாழ்கினனெனின், தயரதனொடு அவன் தேவியர் துயர் கூர்ந்தது வியப்பாமோ. இமையோர் இடுக்கணைக் காப்பதற்குத் தான் அத்துயர் எய்தவேண்டுமென்பது அவன் திருவுளம். மாநுடமக்களைப் பெற்றிருப்பாராயின் நாயனார்வாக்கிற் கிழுக்கொன்று மிலதாகும். மாநுடமுறைகளெல்லாங் பின்னுகக் கடந்துநின்றவொருவன், இவர்வயின் பிறந்தானேனும் மகனெனும் பான்மையில் பயில்த லியலாதாதலின், இராமன்தன் அன்னையர்க்கும் தந்தைக்கும் நேரவரும் இன்னல் நீங்கியதில்லை. ஈதுணராக் கைகேயி, 'இராமனைப் பயந்தவெற்கு இடருண்டோ' வெனக் கூறத் துணிந்தனள்.

ஆழ்ந்தபே ரன்பினு ளனைய கூறலும்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலந் திருவும் வீய்ந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள்.

[இராமனிடத்து ஆழ்ந்த பேர் அன்புடைய கைகேசி அவ்வாறு கூறவும், அவளைச் சூழ்ந்துகொண்ட வொரு நெருப்பின் தொழிலிற்கு ஒப்பான கூனி பதிலுரைப்பாளாய், "உன் நன்மை அழிந்தது, உன் செல்வம் ஒழிந்தது. கோசலையே தன் புத்தியின் சாமர்த்தியத்தால் வாழ்ந்தவளானாள்", என்றாள்]

தனக்குமோ ரிடர்தான் வந்தெய்து மென்பதனினும் வியப்புடைத்து, கோசலைக்கு வாழ்வு வந்ததெனு மிவ்வாசகம். ஆதலின்,

அன்னவ ளவ்வுரை யுரைப்ப வாயிழை
மன்னவர் மன்னனேற் கணவன் மைந்தனேற்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனில்
என்னிதன் மேலவட் கெய்தும் வாழ்வென்றாள்

[கூனி அந்த வார்த்தையைச் சொல்லவும்—ஆய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்த கைகேசி, "கணவனோ என்றால் சக்ரவர்த்தி, மைந்தனோ என்றால் உரைப்பதற்கரிய பெரும் புகழுடைய பரதன்; இதன்மேல் அக் கோசலைக்கு வரக்கூடிய வொரு புதிய வாழ்வுதான் எது?" என்றனள்]

நயமுற அணிகளை அமைக்குந்திறத்திற்கோ கம்பர் நூலில் கரையில்லை. இசைமுறையிற் பெரிய இராகங்களென்றும் சிறிய இராகங்களென்றும் சில இராகங்களைப் பிரித்துக் கூறுவர். பெரிய ராகங்களையெல்லோரும் ஒவ்வோரளவு பாடிவிடுவார். ஆனாற் சிறிய இராகத்தைப் பெருமையுறப் பாடவல்லார் இசைக்கலையில் முதன்மையாயவர்களே யாவர். இராகத்தைப் போல் அணிகளிலும், பேரணியென்றும் சிற்றணியென்றும் வரையறை செய்யலாம். பரிமாற்றணி எனப்படும் பரிவர்த்தநாலங்காரம் சிற்றணியின்பாற் சேருமெனினும் அதனை ஒரு செய்யுளில் புலப்படுத்தாது மூன்றுநான்கு செய்யுள்களிலடங்கிய தொகுதிப்பொருளில் செருகிவைத்து உணர்வித்த கலைத்திறம் ஓதுவோர் மனத்தில் மகிழ்ச்சி மிக ஊட்டுகின்றது. "இராமனைப் பயந்தவெற்கு இடருண்டோ" வெனக் கைகேசி இராமனைத் தன் பிள்ளையாக்கிக் கொண்டு, இச்செய்யுளில் வேறோர் நிமித்தமாகப் பரதனைக் கோசலைக்குப் பிள்ளையாய்க் கொடுத்துவிட்டாள். 'பரிவ்ருத்திர் விநிமயோ ந்யூனப்யதி கயோர் மிதஹ' என்று இவ்வணிக்குக் காளிதாசன் வகுத்த இலக்கணத்தின்படி தாழ்ந்ததைக் கொடுத்து உயர்ந்ததைப் பெற்றுக்கொள்ளவேண்டுமாதலால், வேதமே அன இராமனை வாங்கிக்கொண்டு பன்னரும் பெரும் புகழ்தான் உடைய பரதனைக் கொடுத்தது தக்கதாயிற்று. ஆனால், வேற்றுமையுற்றிலா அவள், யார் யார் பிள்ளையென்பதை நினையாது இவ்வாறுகூறியதே உண்மையாதலின் இதனில் மயக்க அணியும் உளது. இவ்விதம் மயக்கவணி ஆதாரமாகப் பரிவர்த்தனையணி பிறக்கவைப்பதன் அருமை, அணிகளின் நயந் தெரிந்தவர்களால் நெடிதுநினைந்து துய்க்கப்படும். இராமனைப்பயந்த தனக்கு இடரில்லை என்று கூறியதால் புதல்வர் நால்வரிலும் இராமனே உயர்ந்தவன் என்று கைகேசி கொண்டவளாதல் பெறப்படும். எனின், சந்திராலோகத்தின்படி சிறியதைக் கொடுத்துப் பெரியதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்கு இது எதிராயிருப்பதுடன், சமமானவைகளைப் பரிமாறிக்கொள்ளினுங் கொள்ளலாம் எனக் கூறும் தண்டியலங்காரத்திற்கும் இது இணங்காது நிற்பதுபோல் தோன்றினும், "நின்னினும் நல்லன் பரதன்" எனப் பின் கோசலை உரைப்பதை நோக்குங்கால் இராமனுக்கே சிறப்பைக் கைகேசியும் பரதனுக்கே சிறப்பைக் கோசலையுந் தனித்தனி நல்கிச் சமமாகப் பரிமாறிக்கொண்ட பான்மை அரிதின் புலப்படுகின்றது. கலைநிலாவிய வுணர்வினிற் செம்மையண்மை யெனுஞ் சிதைவிலதாகையால் பிணிவிடாது ஒரு அணி பலபாசுரங்களை இணைத்தலு மமையும்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[474-ஆவது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை. (Behaviour)

அறிவுச் செயல்:—ஒரு குளவி தனது இரையைக் கொணர்ந்து தன் வளைக்கருகே விட்டுவிட்டு, உள்ளே போய் வெளிவந்து பின் அவ்விரையை வளைக்குள் இழுத்துக்கொண்டுபோகும் எனக் கண்டோம். ஈதே அதன் இயற்கைச்செயனிலை. அக்குளவி வளைக்குள்ளே போயிருக்கையில் பன்முறையும் அவ் விரையைத் தொலைவில் ஒருவன் இழுத்துவிடுகின்றான். இப்புதியநிலையிற் பழகிய குளவி, இரையை வளையருகில் விட்டுவிட்டு உள்போய் வெளிவந்து அதனை வளைக்குள் கொண்டுபோகும் சடங்கை விட்டுவிட்டு நேரே அவ்விரையை உள்கொண்டு செல்கின்றது. இவ்வாறு மாறியநிலைக்கு ஏற்றவாறு தன் செயலையும் மாற்றிச்செய்வதே அறிவுச் செயலாகும். இயற்கைச் செயலுக்குத் துணையாகிவருவதே அறிவுச் செயலாகும். மாறிய நிலையோடு பழகியதனால் அதனை உணர்ந்து அதற்கியைய நடத்தலே அறிவுச் செயல் ஆகும். முன்னைய துய்த்துணர்வைப் (Experience) பயன்படுத்திக்கொண்டு நடப்பதே அறிவுடைமையாகும். உள்ளேபோய் வெளிவருவதற்குள் இரையை எவரோ தொலைவில் கொண்டு செல்கின்றனர் எனத் துய்த்துணர்ந்தபோது, அதை மனதில் வைத்துப் பயன்படுத்திக்கொண்டு இரையை வெளியே விடாது தன்னோடேயே வளைக்குள் கொண்டுசெல்கின்றது. காலத்திற்கும் இடத்திற்கும் தக்கவாறு உலகத்தோடொப்ப ஒழுகலே அறிவின் செயலாகும். புறநிலையாகிய உலகநிலையோடு பொருத்த முறுகின்றோம்; பழகி விடுகின்றோம். ஆதலின், கல்வி பயிற்சி பழக்கம் என்ற இவற்றின் பயனே அறிவு வளர்ச்சியாகும். உயர்நிலை யடைந்த உயிருளிகளிடையே, இளமைப் போது நீண்டிருப்பதால், அவை உலகவறிவு மிக்கவையாய் விளங்குகின்றன.

அறிவுடைய உயிருளிகள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோர் மக்களே யாவர். இவ் வறிவுப் பெருக்கம் இவர்களுடைய இயற்கையமைப்பைப் பொறுத்தது அன்றோ? தவளையினும் எலி அறிவுடையது; எலியினும் நாய்க்கு அறிவு மிகுதி; நாயைவிடக் குரங்கு அறிவு மிகுந்து விளங்குகிறது; குரங்கைக் காட்டிலும் மக்கட்கு அறிவு மிகுதி. இவ் வறிவுவேற்றுமை எதனாலாயது? ஈது இயற்கையமைப்பைப் பொறுத்ததே யாகும். தவளை எலியினும் அறிவுடையது என்றதனாலேயே எல்லாத் தவளைகளும் ஓரே அறிவுநிலையில் உள்ளன என்று சொல்வதற்கில்லை. அங்ஙனமே மக்களும் ஓரே அறிவுநிலையில் விளங்கவில்லை. இவ் வறிவுப்பெருக்கத்தை ஒருவகையில் பொதுவாக அளந்து பார்க்கலாம். ஓர் ஆண்மகன் பதினாறாண்டு நிறையப்பெற்று விளங்குகிறான். அவன் செய்கைகளைக் கண்டாலோ குழந்தையின் செயல்களாகக் காணப்படுகின்றன. குழந்தைகளோடேயே எப்போதும் பாவை வைத்துக்கொண்டு விளையாடுகின்றான். அதனால், அவன் ஐந்தாண்டுப் பிள்ளையின் அறிவோடு விளங்குகிறான், எனப் பேசிக்கொள்கின்றோம். ஐந்தாண்டுப் பிள்ளைகள் பலரை நாம் அறிவோம்; அவர்களுடைய செய்கைகள் இத்தகையன என அறிந்துள்ளோம்; அறிவு நிறையப்பெறாத பதினாறாண்டு மகனது அறிவை அவ் வளவையைக்கொண்டு அளந்தோம். இவ்வாறே பலவேறு ஆண்டு நிலையிலுள்ள பல பிள்ளைகளை ஆராய்ந்து அறிவை அளக்கும் அறிவுஅளவைகளை அறிஞர்கள் ஏற்படுத்தி யுள்ளார்கள். அதனிற் பழகியவர்களே அவ்வளவைகளைக் கையாளவேண்டும். பிறந்த ஆண்டை எண்ணிப்பார்ப்பதுபோல மனஆண்டையும் (Mental Age) எண்ணிப் பார்த்தல்வேண்டும். பலருக்கு, மனவாண்டும் பிறந்த ஆண்டும் ஒன்றாகவே இருக்கின்றன. சிற்சிலரிடத்தே முன் நாம் கண்டபடி வேறுபடுகின்றன.

அறிவென்றால் என்ன? அதை எப்படி அளப்பது? அறிவளவைகள் சிலவற்றை உற்றுநோக்கினால் இவ்வுண்மை புலனாகும். மூன்றாண்டு நிரம்பிய குழவிகள் பலரோடு பேசிப் பழகுகின்றோம். அக்குழவிகள் தம் வீட்டிலுள்ள பொருள்களின் பெயரை அறிந்திருக்கின்றனர். ஆனால் எல்லாப் பொருள்களின் பெயர்களையும் இன்னும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. ஏதாவது ஐந்து பொருள்களைக் காட்டினால், அவற்றில் மூன்று பொருள்களின் பெயர்களையேனும் தவறின்றிக் கூறிவிடுகின்றனர். இவ்வாறு மூன்றாண்டு மனத்தை நாமறியலா மன்றோ! ஆறு ஆண்டு நிரம்பிய பையன் எதிரே ஓர் ஓவியமெழுதி அதிலே கண்மூக்கு விரல் முதலிய சில உறுப்புக்களை எழுதாமலே விட்டுவிட்டால் அவன் அவ்விடுபட்ட உறுப்புக்களைச் சொல்வான். விடப்பட்ட நான்கு உறுப்புக்களில் மூன்றையேனும் தப்பாமற் சொல்லுவான். இவ்வாறு ஆறாவது மன ஆண்டை அறியலாம். எட்டாவது ஆண்டில் கரியையும் கட்டையையும் அவன் எதிரில் வைத்து அவற்றிற்கு உள்ள ஒற்றுமை என்ன என்று கேட்டால் விடையளிப்பான் அன்றோ? இவ்வாறு அவன் பழகியறிந்த பல பொருள்களை இவ்விரண்டாகக்காட்டி அவற்றின் ஒற்றுமை யாதெனக்கேட்கலாம். நான்கு கேள்விகளில் இரண்டு கேள்விகளுக்கேனும் பொருத்தமான விடையளிப்பவனை எட்டாவது மன ஆண்டுடையவன் எனக் கூறலாம் அன்றோ? பன்னிரண்டாவது ஆண்டில் அந்நிலையிலுள்ளார் அறிந்திருக்கக்கூடிய பல சொற்களின் பொருளைக் கேட்டால் பிள்ளைகள் அதனை எடுத்துக் கூறுவர் அன்றோ? நூறு சொற்கள் எடுத்துக் கூறினால் அவற்றில் நாற்பதற்கேனும் தவறின்றிப் பொருள் கூறுகின்றனர். இக்குறிப்புக்கள் பினட் (Binet) என்பார் ஏற்படுத்திய அறிவளவையில் காணப்பட்டவையாகும்.

ஆனால் ஊமை செவிடு முதலானோரின் அறிவை எவ்வாறு அளந்தறிவது? அவர்களுடைய செயல்களைக் கொண்டுதான் அறிதல் வேண்டும். அறிவுச் செயளவை (Performance test) என்று இதனைக் கூறலாம். பலவடிவமான மரத்துண்டுகளை ஒரு மரத்

தட்டினின்றும் வெட்டியெடுத்து அத்தகையோர் எதிரில் வைத்து, வெட்டிய அத்துண்டுகளை அவர்கள் எவ்வாறு பதியவைக்கின்றார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டே யிருந்தால் அவர்களுடைய பொருத்த முணரும் அறிவினை அறியலாம் அன்றோ? ஒவ்வோர் துண்டையும் பொருத்திவைக்க எத்துணை நேரமாகின்றது? எத்துணைமுறை தட்டித் தவறி வருந்துகின்றனர். இவற்றை எல்லாம் குறித்து வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் ஒருவர் அறிவோடு மற்றொருவர் அறிவை ஒப்பிட்டுப் பார்க்கலாமே.

இவ்வாறு தனித்தனியாக ஒவ்வொருவர் அறிவையும் நாம் அளந்து பார்ப்பதென்றால் முடியுமா? ஆகவே கூட்டங்கூட்டமாக உள்ள படையாளர்களது அறிவை அறிவதற்குச் சில அளவைகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அச்சடித்த சில தாள்களை எல்லோரிடமும் கொடுத்துவிடுவார்கள். ஓர் ஏட்டில் வட்டம் மும்முனை நான்முனை என்ற வடிவுகளை எழுதியிருப்பார்கள். அவற்றை ஒன்றாகச் சேர்த்து வைக்கவோ, அவற்றைப் பிரிக்கவோ, அல்லது அவற்றிற் சிலவற்றை வேறுவடிவமாக மாற்றவோ வாயால் ஒருமுறை சொல்வார்கள். ஆகையால் சொல்வதைக் கருத்தாய்க்கேட்க வேண்டும். மற்றோர் ஏட்டில் உலக அறிவைப் பற்றிய பல கணக்குகளை அச்சடித்து விடுவார்கள். மூன்றாம் ஏட்டில் உலகத்துப் பொருள்களைப்பற்றிச் சில கேள்விகள் இருக்கும். மின்னோட்டத்திற்குச் செப்புக் கம்பிகளைப் பயன்படுத்துவதேன்? மின்னோட்டம் நன்றாக ஓடுமென்றா? செப்பின் விலை குறைவு என்றா? செப்பு நம் ஊரில் அகப்படுகிறதென்றா? இந்த மூன்று எண்ணங்களில் எவ்வெண்ணம் சிறந்தது? இவ்வாறு ஒவ்வொருசெய்திக்கும்இம்மூன்று கருவிகளைக் காட்டி அவ்வவற்றில் சிறந்தன இவை என எழுதச் சொல்வார்கள். சொற்றொடர்களிலுள்ள மொழிகளை மாற்றியமைத்து மற்றோரேட்டில் அச்சடித்திருப்பார்கள். "வானம் இருக்கும் பச்சை காலையில் ஆக நிறம்", "பால் பசுவின் வெள்ளை இருக்கும் ஆக" என்று இருக்குந் தொடர்களிலுள்ள சொற்களைப் பொருள்படுமாறு "காலையில் வானம் பச்சை நிறமாக இருக்கும்" "பசுவின் பால் வெள்ளையாக இருக்கும்" என்பனபோல மாற்றித் தொடர்ச்சியாக எழுதவேண்டும். எழுதியபின் அவை உண்மையா பொய்யா என்பதையும் எடுத்தெழுத வேண்டும். காலை வானம் பச்சை நிறமாக இருத்தல் பொய் என்றும் எடுத்துக் காட்டவேண்டும். பிறிதோர் ஏட்டில் சிலஓவியங்கள் வரையப்பட்டிருக்கும். அவற்றில் சிலவற்றில் கால் முதலிய சிலவுறுப்புக்கள் குறைந்தும் சில வுறுப்புகள் மிகுந்தும் காணப்படும். மூன்று கண்ணிருந்தால் ஒரு கண்ணை அழித்துவிட வேண்டும்; கையில் நான்கு விரல் இருந்தால் ஐந்தாம் விரலை எழுதவேண்டும். இவ்வாறு குறையை நிரப்பியும், மிகுதியை அழித்தும் அவ் வோவியங்களைச் சீர்திருத்த வேண்டும். இவ்விடைகளை எல்லாம் நன்றாய் அறிந்த பின், முன்சொன்னபடியே அவ்வவர்களுடைய அறிவை அளந்து கொள்வார்கள்.

ஒருவனுடைய அறிவுநிலையைப் பொதுவாக அறிய இவ்வளவைகள் பயன்படுமேயன்றி ஒருவனுடைய சிறப்பியல்பை இவ்வளவைகள்கொண்டு அறிய இயலாது. கம்பனை இவ்வளவைகொண்டு நீட்டியோ முகந்தோ எண்ணியோ நிறுத்தோ அறியமுடியாமல் இவ்வளவையின் பயனாக அறிவிற் குறைந்தவன் என ஒதுக்கப்பட்டவன் அக் குறையறிவிற் கேற்றதொரு வேலை யகப்பட்டால் அதில் தலைசிறந்தவனாய் எல்லாராலும் ஏத்தெடுக்கப்படும் பெருஞ்செல்வவானாய் உலகில் வாழ்தல் கூடும். அறிவாளி எனப் புகழப்பட்டவன் தன் அறிவுநிலைக் கேற்ற வேலை யகப்படாமையால் அவ்வாறு புகழ் பெருமையும் போகலாம். அன்றியும் மேல் நாம் காட்டியபடி இவ்வளவைகளைப் பழகியவர்களே கையாள வேண்டும். குழவிகளிடம் சென்று தக்க கேள்விகேட்டு விடைபெறுவதென்றால் அஃதே ஓர் அரிய செயலாகும். அவர்கள் மனதில் அச்சமும் நாணமும் எழாதபடி பார்த்தல் வேண்டும்; நம்முடைய கேள்விகளை அவர்கள் அறிந்து கொள்ளுகிறார்களா என்றும் ஆராய்தல் வேண்டும். குழந்தைகள் வேறு நினைவாக இருந்தார்களானாலும் அந்நினைவிற்கேற்ற விடையை அளித்து விடுவார்கள். அன்றியும் மனங் களைத்துப்போனால் மனம் குழம்பிப்போகும். ஆதலின் மிகுந்தநேரம் கேள்விகளைக் கேட்டு அவர்களுக்குத் தலைநோய் வரும்படி செய்தலும்கூடாது. ஆதலின் இடம் பொருள் மனநிலை முதலியவற்றை ஆராய்ந்து கேள்விகேட்கப் பழகியவர்கள் இவ்வளவைகளைக் கையாண்டால்தான் சிறிதளவேனும் பயன் கிடைக்கும்.

இவ் வளவையனைத்தும் எதனை அளந்தறிகின்றன? மேல்நோக்காகப் பார்க்கும்போது, ஏதோ பல செய்கைகளைத் தவறின்றிச் செய்வதே அறிவுபோலும் எனத் தோன்றலாம். என்றாலும் இவற்றினிடையே சில பொதுஇயல்புகள் தோன்றாமல் இல்லை. உலகத்தில் பல செய்திகளைக் கற்றுப் பல பெயர்களை அறிந்து நினைப்பில் வைத்திருந்தாலன்றோ இவ்வளவைகளில் உயர்நிலை பெறலாம். பழகிய பொருள்களைக் கண்டபோது அவற்றின் பெயர் நினைப்பிற்கு வரவேண்டும்; ஆதலின் நினைவில் வைத்திருத்தல் அறிவின் ஓர் இயல்பாகும். முன் உணர்ந்ததை நினைவில் வைத்திருந்தால்மட்டும் போதாது. முன்னைய துய்த்துணர்வைப் புதிய நிலைக்கேற்றபடி பயன்படுத்திக் கொள்ளவும்வேண்டும். ஈதே பொருத்தம்கண்டு செயலுறுதலாகும். இதனைத் தகுதிநாட்டம் என வழங்கலாம். ஈது ஆழவுணர்தலாகும். பல வடிவமான சிறு மரத்துண்டுகளை ஒரு மரத்தட்டிலுள்ள துளைகளில் புதைப்பதென்றால், பொருத்தம்கண்டு பொருந்திப் பொருந்துவதன்றோ! ஈதே ஒட்ட ஒழுகலாகும்.

இவ் வறிவுச்செயனிலையில் சில உள்துடிப்புகளும் காணப்படுகின்றன. தட்டில் இருக்கின்ற துளைகளை அடைப்பதென்றால், விரைவில் அயர்ந்துபோகாமல் தானெடுத்த வேலையில் வெற்றிவரும்வரை விடாமுயற்சியோடு செய்யவேண்டுமன்றோ? 'ஈதென்ன தொல்லை' என்று நடுவில் விட்டுவிட்டு ஓடிவிட்டால் என்ன பயன்? இவ் விடாமுயற்சி 'நான் செய்து முடிப்பேன்'' என்றமுந்தும் தன்னெடுப்பென்னும் இயற்கைச்செயனிலையையும் அதற்கேற்ற பெருமிதம் என்ற மெய்ப்பாட்டையும் பொறுத்திருக்கின்றது. தன்னை 'ஏழை யறிவிலி' என்று எண்ணி வாளா கிடப்பவன் அறிவுவளர்ச்சி பெறுவது எங்ஙனம்!

துயில்வோன் மந்தன் தோன்னூற் கஞ்சித்
தமோ றுளத்தன் தறுகணன் பாவி
படிறன்இன் னோர்க்குப் பகரார் நூலே.

என்று இதுபற்றியன்றோ பெரியோர் கூறியருளினர். தறுகணனையும் விலக்கிவிட்டார் பவணந்தியார். விடாமுயற்சி நல்லதேனும் விடாப்பிடி உதவாது. 'கொடியனும் கொடிறும் கொண்டது விடா' என்பது ஒரு பழமொழி. தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என மன்றாடுவார் அன்னதற்கு மேலே வேறென்ன அறிதல் கூடும். தனது கொள்கை பொருந்தாதபோது வேறு பொருத்தமானதொன்றைத் தேடவேண்டும். வட்டத்துளையில் நாலுமுனைத் துண்டை வைத்து அழுத்தினால் உட்புகாதது கண்டு, வேறொருதுண்டை வைத்து அழுத்திப்பார்க்க உடனே தொடங்க வேண்டும். அதைவிட்டு அந்த நான்முனைத் துண்டையே அந்த வட்டத்துளையில் புதைக்கமுயன்று நாளெல்லாம் வருந்தினால் ஏதேனும் நிறைவேறுமா? அப்படித் தவறித் தகுதிநாடி யறியவேண்டும் இவையனைத்தும் தன்னொடுக்கம் என்ற இயற்கைச் செயனிலையில் காணப்படுவன ஆதலின் தன்னொடுக்கமும் வேண்டும். எனவே தன்னெடுப்பும் தன்னொடுக்கமும் தக்க அளவில் இயைந்து விளங்கினால்தான் அறிவு வளரும்.

அறிவு வளரவேண்டும் என்றால், பல பொருள்களையும் நன்குணர்தல் வேண்டும். அஃதாவது அவற்றை அருகேசென்றாராய்தல் வேண்டும். புதுமைகண்டு ஆராய்ச்சிசெய்ய முற்பட வேண்டுமானால் விடுப்பு என்ற இயற்கைச்செயனிலை தக்கவளவில் விளங்குதல் வேண்டும். இவ்வியற்கைச் செயனிலை செயலுறாமற் போனால் அறிவு வளருவது ஏது. ஒரு பொருளையும் உற்றுநோக்கப் போவதில்லை என்றால் உணர்ச்சியும் இல்லை.

அறிவுஎன்பது இயற்கை யமைப்பு அல்லதாயினும், அதன் வளர்ச்சிக் கிடமாகும் நினைப்பு, உணர்வு, தன்னொடுக்கம், தன்னெடுப்பு, விடுப்பம் என்ற இவையனைத்தும் இயற்கை யமைப்புகள் அன்றோ? இவ்வாறு இயற்கையமைப்பாக இவைகள் அமைதலால் தான் தலைமுறை தலைமுறையாக ஒருகுடியில் அறிவாளிகள் பிறக்கக்காண்கிறோம். இவ் வியற்கையமைப்புகள் பயிற்சிபெற்றாலன்றோ அறிவு வளரும். கல்விமானாய ஒருவனுடையபிள்ளை இவ் வியற்கையமைப்பைப்பெறலாம். சேர்கைமணத்தால் வேறுவகையில் வாழ்க்கையை நடத்தி அவ்வியற்கையமைப்புகளைத் துரும்பேற விட்டால் அவன் அறிவிலியாகப் போவான் என்பதனை நாம் மறத்தலாகாது இயற்கையமைப்புகளை ஏற்றவாறு பழக்கிக்கொள்வதே அறிவு என்க.

தமிழ்ப் பாடம் 126.

[467-வது பக்கத் தொடர்ச்சி.]

இலக்கணம்.

வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்களிலும், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்களிலும், எழுவாய் விளி, வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், இடைச்சொல், உரிச்சொல், அடுக்கு ஆகிய அல்வழித் தொகாநிலைத் தொடர்களிலும், உயிரையேனும், குற்றியலுகரத்தையேனும், யகர ரகர ழகர மெய்களையேனும் ஈற்றிலுடைய நிலைமொழியும் வல்லின மெய்யை முதலிலுடைய வருமொழியும் புணரும்போது, அவ்வருமொழிமுதலில் உள்ள வல்லின மெய் எவ்வெப்போது மிகும் என்றும் எவ்வெப்போது மிகாது என்றும் உரைத்தோம்.

இனி, வேற்றுமை அல்லாத வழியில், தொடர்கின்ற தொகைநிலைத்தொடர்கள் ஐந்து உள. அவை தாம், வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பனவாம். இத்தொகைகளில் வருமொழிமுதல் வல்லினமெய் புணர்கின்ற விதங்களைப் பார்ப்போம்.

௧. வினைத்தொகை.

செய்த தொழில், என வருங்கால் செய்த என்னும் நிலைமொழி பெயரெச்சம். அப்படியே, உடுக்கின்ற துணி, ஓடும் குதிரை, என்பவைகளில், உடுக்கின்ற, ஓடும் என்னும் நிலைமொழிகளும் பெயரெச்சங்களே. வினைச்சொற்கள் தொழில் ஒன்று செய்வதைச் சொல்லும். செய்தான், உடுக்கின்றான், ஓடுவான், என்பனபோல் அத் தொழில் நடைபெற்று முடிவடைவதற்குரிய தன்மையைக் காட்டினால் அவ் வினைச்சொல் வினைமுற்றாகும். அல்லது, செய்து, செய்ய, செய்த, என்பனபோல் குறையாக நின்று, செய்து போனான், செய்த பையன் என்ன, முடிவதற்கு வேறொரு சொல் வேண்டியிருக்குமானால், அவ்வாறு குறையாக நிற்கின்ற சொல், எச்சம் எனப்படும். எச்சமாய் நிற்கின்றசொல், ஓடி வந்தான், படிக்கச் சொன்னான், என்பனபோல் முடிகின்றசொல் வினைச்சொல்லாயின், வினையெச்சம் என்றும்; ஓடிய நாய், படித்த புஸ்தகம், என்பனபோல் முடிகின்ற சொல் பெயர்ச்சொல்லாயின் பெயரெச்சம் என்றும் அழைக்கப்படும். (வால்யூம் 1, பக்கம் 51.)

எல்லா வினைச்சொற்களையும்போல் பெயரெச்சமும் காலத்தைக் காட்டவேண்டும். எழுதிய கடிதம், எழுதுகின்ற கடிதம், எழுதும், கடிதம், என்பவைகளில் எழுது என்னும் பகுதியினடியாகப் பிறந்த பெயரெச்சங்கள், எழுதிய என்றுநின்று இறந்த காலத்தையும், எழுதுகின்ற என்றுநின்று நிகழ்காலத்தையும், எழுதும் என்றுநின்று எதிர்காலத்தையும், முறையே காட்டிவரக் காணலாம். ஆனால் சிலசமயம் இன்னகாலமென்பது தெரியாமல் மறைந்திருக்கும்படி பெயரெச்சங்கள் நிற்கவும் கூடும். செய்தொழில், உழுமாடு, ஓடுகுதிரை, வருபுனல், என்பவைகளில் செய், உழு, ஓடு, வரு எனும் நிலைமொழிகள் பெயரெச்சங்களாயினும் காலமின்னதென்றுகாட்டாமல் நிற்கின்றன. செய்தொழில், என்பது சந்தர்ப்பத்திற் கேற்றவாறு செய்தொழில் என்று இறந்த காலத்தையேனும், செய்கின்றதொழில் என்று நிகழ்

காலத்தையேனும், செய்யும்தொழில் என்று எதிர் காலத்தையேனும் காட்டலாம். இவ்வாறு காலம் கரந்த பெயரெச்சம் நிலைமொழியாகத் தொடர்கின்ற தொடர் வினைத்தோகை எனப்படும். காலம்காட்டும் இடைநிலையும் விகுதியும் தொக்கு இருப்பதால் இது தொகைஎன்னலாகின்றது. (வால்யூம் 2, பக்கம் 377)

வினைத்தொகையில் வருமொழிமுதல் வல்லின மெய் ஒருபோதும் மிகாது:—

உழு + படை = உழுபடை
சுட்டு + தனம் = சுட்டுதனம்
எரி + தழல் = எரிதழல்
ஊது + குழல் = ஊதுகுழல்
பிடி + துணி = பிடிதுணி
காய் + சுடர் = காய்சுடர்
களிகூர் + காட்சி = களிகூர்காட்சி
வீழ் + புனல் = வீழ்புனல்
நிகழ் + காலம் = நிகழ்காலம்

குறிப்பு:—**வினைத்தொகைகளில் நிலைமொழிகள் எல்லாம் வினைச்சொற் பகுதிகளாகவே இருக்கும். இப் பகுதிகள், விரிசுடர், உடுபுடவை, சுடுகல், கொய் தளிர், என்பனபோல் இயல்பாயிருப்பினும், அல்லது வருபுனல் தருபணம் என்பனபோல் விகாரப்பட்டிருப்பினும் அத்தொடர்கள் வினைத்தொகைகளே.**

P. பண்புத்தோகை.

பண்புத்தொகையின் இலக்கணம் முன் (2-வது வால்யூம், 395, 411-வது பக்கங்களில்) கூறப்பட்டிருக்கின்றது.

I பண்புத்தொகையில் வருமொழிமுதல் வல்லின மெய் மிகுந்து புணரும்.

அடி + தளிர் = அடித்தளிர். அடியாகிய தளிர் என்று விரியுமாகையால் இது பண்புத்தொகை.

கை + தாமரை = கைத்தாமரை
பலா + செடி = பலாச்செடி
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு
உவகை + சுவை = உவகைச்சுவை
தமிழ் + சொல் = தமிழ்ச்சொல்.

II (1) ஒன்று, இரண்டு, நான்கு ஐந்து ஆறு ஏழு ஒன்பது எனும் எண்ணலளவைப் பண்புப்பெயர்கள் அப்படியே நின்றாலும் அல்லது ஒரு ஓர் இரு அறு எழு, என விகாரப்பட்டு நின்றாலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

ஒரு + குதிரை = ஒரு குதிரை
இரு + செவி = இரு செவி
நான்கு + திசை = நான்கு திசை
ஐந்து + பொறி = ஐந்து பொறி
ஆறு + சமயம் = ஆறு சமயம்
அறு + சமயம் = அறு சமயம்
ஏழு + கிணறுகள் = ஏழு கிணறுகள்
எழு + பிறப்பு = எழுபிறப்பு
ஒன்பது + துவாரம் = ஒன்பது துவாரம்.

(2) எட்டு, பத்து, என்னும் வன்றொடர்க் குற்றிய லுகரத்தை ஈற்றிலுடைய எண்ணுப் பெயர்களுக்குப் பின்னும், மூன்று என்பது 'மு' என்று விகாரப்பட்டு நிற்பினும், வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

எட்டு + திக்கு = எட்டுத்திக்கு
பத்து + தலை = பத்துத்தலை
மு + பிழை = முப்பிழை

குறிப்பு:—விகாரப்படாமல் மூன்று என்றே நிற்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

மூன்று + கண் = மூன்றுகண்.

(3) முதுமை, சிறுமை, என்னும் பண்புப் பெயர்கள் முது சிறுஎன விகாரப்பட்டு நிலைமொழியாக நிற்கும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

முது + பேய் = முதுபேய்
சிறு + குழந்தை = சிறு குழந்தை

குறிப்பு:—பொதுமை முழுமை புதுமையென்னும் பண்புப்பெயர்கள் பொது முழு புது என விகாரப்பட்டு நிற்கும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

பொது + குணம் = பொதுக்குணம்.
முழு + பழம் = முழுப்பழம்
புது + புனல் = புதுப்புனல்.

அரை, என்னும் அளவைப்பெயர்க்குப் பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

அரை + காசு = அரைக்காசு
அரை + கும்பிடு = அரைக்கும்பிடு.

III நிலைமொழி வருமொழி இரண்டும் சமஸ்கிருதச்சொற்களா யிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

பாத + பங்கஜம் = பாதபங்கஜம்
நாக + பாசம் = நாகபாசம்.

Q உவமத் தோகை

உவமத் தொகையின் இலக்கணம் முன் (2வதுவால்யூம், 432வது பக்கத்தில்) கூறப்பட்டிருக்கின்றது.

I உவமத் தொகையில் வருமொழிமுதல் வல்லின மெய் மிகுந்தே புணரும்.

தாமரை + கை = தாமரைக் கை
கற்பக + கொடை = கற்பகக் கொடை
அமுத + சொல் = அமுதச் சொல்.

குறிப்பு:—(1) எனினும் உவமத் தொகையிலும், வருமொழி பெயர்ச்சொல்லா யிராது வினைச்சொல்லா யிருக்குமாயின், வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

கோழி + கூவினன் = கோழி கூவினன்
கிளி + கூவினன் = கிளி கூவினன்
புலி + பாய்ந்தான் = புலி பாய்ந்தான்

இவை கோழிபோல் கூவினன் என்றும், கிளிபோல் கூவினன் என்றும் புலிபோல் பாய்ந்தான் என்றும் விரியுமாகையால், உவமத்தொகைகளாகும்.

II நிலைமொழி வருமொழி இரண்டும் சமஸ்கிருதச் சொற்களாயிருக்குமாயின் உவமத்தொகையிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

கமல + பாதம் = கமலபாதம்

R. உம்மைத் தோகை

உம்மைத் தொகையின் இலக்கணம், முன் (2 வது வால்யூம், 432வது பக்கத்தில்) கூறப்பட்டிருக்கின்றது.

I **உம்மைத் தொகையில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.**

சேர + சோழ + பாண்டியர் = சேரசோழபாண்டியர்
நெய் + பால் = நெய்ப்பால்

மிளகு + திப்பிலி = மிளகுதிப்பிலி
தாய் + தந்தை = தாய்தந்தை
கத்தி + கேடயம் = கத்திகேடயம்.
வெற்றிலை + பாக்கு = வெற்றிலைபாக்கு.

குறிப்பு:— (1) நிலைமொழி, இரண்டெழுத்துச் சொல்லாயிருந்து பின்னெழுத்து நெடிலாகவும் இருக்குமானால் உம்மைத்தொகையிலும் வருமொழி முதல் வல்லினமெய் மிகும்-

இரா + பகல் = இராப்பகல் (இரவும் பகலும்.)
சுறா + கயல் = சுறாக்கயல் (சுறாவும் கயலும்)

(2) நிலைமொழி வன்றொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றில் உடையதாயின் உம்மைத் தொகையிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

சுக்கு + திப்பிலி = சுக்குத்திப்பிலி (சுக்கும் திப்பிலியும்)

S. அன்மோழித் தோகை.

அன்மொழித் தொகையின் இலக்கணம், முன் (வால்யூம் 2, பக்கங்கள் 455, 470 & 491) கூறப்பட்டிருக்கின்றது. வேற்றுமை, பண்பு, வினை, உவமம், உம்மை, ஆகிய இத்தொகைகளில் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே சில தொக்கு இருப்பதோடு வருமொழி இறுதியிலும் சில தொக்குஇருந்து அத்தொடர் வேறோர் பொருள் தரும்படி நிற்குமாயின் அது அன்மொழித்தொகை. இவ் வன்மொழித் தொகையே பொருளால் நிலைமொழிபோல் நின்று வருமொழிமுதல் வல்லினமெய்யோடு புணரும். அப் புணர்ச்சி இதுகாறும் சொல்லிவந்த விதிகளுக்கு அடங்கி நடக்குமாதலால் சிறப்பாக ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை.

நம்மாழ்வார் வைபவம்.

18919

திருவாய்மொழி.

[472-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பத்து 5-ம் பதிகம்.
பெரியோர் உரை நிர்வாஹம்.

ஐந்தாம் தசகமாகிய "வளவேழுலகின்" என்ற தசகத்தை முன் னுரைகளில் பொருள்விளக்கினோம். சென்றுபோன நான்காம் தசகமாகிய "அஞ்சிறைய மடநாராய்" என்றதசகத்தில் ஆழ்வார் பகவானுடைய திவ்விய கல்யாணகுணங்களி லொன்றாகிய "அபராதஸஹித்துவம்" அதாவது "எப்பிழையும்பொறுத்தல்" என்பதில் உறுதிகொண்டு தன் குற்றங்களைக் கண்ணோட்டம் செய்து, தான் தொண்டுபுரிவதைப் பகவான் ஏற்பதற்கு வரவேண்டுமென்று தூதுவிட்டார். இத் தூதுக்கிணங்கி எம்பெருமான் ஸர்வவித சம்பத்துக்களுடன் ஆழ்வார்முன்னிலையில், அவர்தம் இஷ்டப்படி எல்லாத் தொண்டுகளையும் ஏற்க எழுந்தருளினானென்பது பூர்வ உரைகாரர்கள் நிர்வாஹம். ஆனால், பகவான்வந் தெழுந்தருளிய செய்தி முதல் பாசுரத்தில் எப்படித்தெரியவருகிறது என்பது முதல் ஆக்ஷேபம். பகவத்குணங்களைக் கூறவும் உள்ளபடி நினைந்து அநுபவிக்கவும் தாம் அநர்கரென்றும் ஆகையால் தாம் அவனுக்குத்தொண்டுபுரிதல் தஹாதென்றுமல்லவோ அப்பாசுரம் கூறுகின்றது. இரண்டாவது பாசுரத்தில், நித்தியஸூரிகளே பக்திசெய்தாலும் அவன்பெருமை மழுங்குமென்றும் தாம் அடிமை செய்வது அயுக்தமென்றும் கூறுகிறாரேயொழிய எம்பெருமானைவிட்டு ஆழ்வார் அகலுகிறார் என்று கூறும் உரைக்குக் காரணமென்ன? மூன்றாவது பாசுரத்தில், ஆழ்வார் பகவானது மாதுர்வாத்ஸல்யத்தைப் பிரஸ்தாபித்துத் துதிசெய்கிறதாக நமக்குப் புலப்படுகின்றதேதவிர ஆழ்வார் எப்பெருமானை விட்டு அகலுகின்றாரென்றும் எம்பெருமான் ஆழ்வாரைச் சமாதானப்படுத்துகிறாரென்றும் ஊஹித்திட இடமேது. நாலாம்பாசுரத்தில், "வானோர் பெருமான் மாமாயன் வைகுந்தன் எம்பெருமானே" என்று கூறியதிலிருந்து ஆழ்வார், "எல்லாத் தொண்டுகளையும் யான் இயற்றுவேன்" என்று தம் திருவுள்ளத்தைத் தேற்றிக்கொண்டாரென்று எப்படித் தீர்மானிக்கலாம்? ஐந்தாம்பாசுரத்தில் "தேனே மலரும் திருப்பாதம் சேருமாறு நீ அருளாய்" என்றன்றோ கிடக்கின்றது. இதிலிருந்து, முன்னைய உரைகாரர்கள் எம்பெருமான், தானே சென்று ஆழ்வாருடன் கலவியைத் தொடங்கினால் அவர் மருண்டு விலகுவார் என்னும் எண்ணத்தால் தாம் பதட்டம் இல்லாமல் இருந்தவிடத்திலேயே வாளாவிருந்தார் என்று பொருள் கூறுவது எப்படித் தகுதியாகும். ஆறாவது பாசுரத்தில் "அடியேன் நைவனே" என்று முடிக்கிறார். "வினையேன் வினைதீர் மருந்தானாய்" என்று சொல்லியவிடத்தில் அநர்ஹதானுசந்தானம், அதாவது தான் தகாதவன் என்ற எண்ணம், வினையென்று பொருள் கொள்வானேன்? திருவாய்மொழி முதல்பாசுரத்திலே தமக்குப்பகவான் "மதிநலம்" அருளினானென்றதைக் கொண்டு இதற்குப் பொருள்கூறத் தடையென்ன? ஏழாம்பாசுரத்தில் தான் 'ஜரை மரணம்' இவைகளினின்று விடுபடுதலாய கைவல்லியம் என்கிறமோக்ஷத்தின் ஒரு பகுதியை யாசித்து அதைப்பெற்றுப் போகிறவர்களை நல்ல சூழ்ச்சியுள்ளவர்கள்; அவர்கள்போல அல்லாமல் அவனை எப்போதும் தொண்டுசெய்ய வேண்டுமென்று அஞ்ஞானத்தால் யாம் யாசிப்பது அயர்வு என்றே கூறுகிறார். எட்டாவது பாசுரத்திலும், பெருமாள் ஆழ்வாரது கலவியை அபேக்ஷித்தவராய்த் தொண்டின் ஈடுபாட்டைப் பெற நின்றாரென்று வியக்தமாகக் காணவில்லையே. ஒன்பதாவது பாசுரத்தில் "அம் மஹா மூர்த்தியைச் சார்ந்து" என்றதினால் பகவானிடத்தில் ஆழ்வாருக்குக் கலவி ஏற்பட்டது என்று எப்படி அறிவது? பத்தாவது பாசுரத்தில் தாம் கொண்ட விசிஷ்டாத்துவைத மதத்தைக் கூறுகிறார்—"பகவானுக்குள்ள ஸர்வ கல்யாணகுணங்களும் தமக்குதவிபுரியும் நிமித்தமே" என்று பழைய **உரைகாரர்கள் கூறுவது எப்படி ஒக்கும்? கடைசிப்**

பாசுரத்தில், "இப்பத்தும் வல்லார்க்குப் பரிவது இல்லை" என்று காண்கிறதே தவிர ஆழ்வார்க்குக் கலவி நேர்ந்ததென்று தெரியவில்லையே! இதுபோன்ற பல சந்தேகங்கள்ஏற்பட்டு முன்னுரைகளில் இசைய மனமின்றி வெகுகாலம் தடுமாறிய நாம் பின்பு கீழ்க் குறிக்கும் காரணங்களால் பெரியோர் உரைத்த உரையில்லாமல்போனால் இந்தத் தசகம் விளங்காதுநிற்குமென் றறிந்தோம். அக்காரணங்களை இவ்விடத்தில் எடுத்தெழுதுவோம்:—

"வளவே ழுலகில் முதலாய வானோர் இறையை" என்றதினாலேயே சர்வசம்பத்துக்களுடன் எம்பெருமான எழுந்தருளினதாக அர்த்தம் கொள்ளுதலில் ஒரு தடையுமில்லை. ஆனால் இங்கு விசாரிக்கத்தக்க தொன்றுண்டு. எம்பெருமான் ஆழ்வாரின் ஐம்புலன்களு மறியும்படி எழுந்தருளினரா; அல்லது ஆழ்வார்தம் மனத்திட்பத்தின்கண் தோன்றிய ஒரு தோற்றமா; கனவில் கண்டதுபோல் மனதினால் நினைந்தனவா? என்ற பல சங்கைகளுக்குப் பதில் "இவர் மனதில் தோன்றிய தோற்றம் நேரவே, ஐம்புலன்களாலும் அநுபவித்ததுபோல உள்ள யோகத்தால் ஜனித்த பிரத்தியக்ஷம்". பிரத்தியக்ஷமாய் அவர் கண்ணால் கண்டதுபோல் மனதில் தெளிவும் ஆற்றாமையின்மையுமின்றி யோகபலத்தால் நேர்வதைப் பிரத்தியக்ஷ நிர்த்தாரணம்போலே கூறத் தட்டில்லை. ஏனையோருக்கு இந்நிகழ்ச்சிகூட ஏற்படாது. ஏனெனில் அவர்களுக்குப் பரிசுத்தமான அந்தக்கரணமும் யோகாப்பியாசத்தால் சுத்தமான புறக்கரணங்களும் அமைவது அரிது. கனவில் காணும் தோற்றங்களும் நனவின் தோற்றம்போல் ரூபிக்கப்பட்டன என்று வேதாந்திகள் ஒப்புக்கொள்கிறார். ஆழ்வாருக்கு நிகழும் யோகத்தால் தெளிந்த தோற்றம் கனவினும் சீரிய தன்றோ; பார்த்தாற்போ லுள்ளதைப் பார்த்ததாகக் கூறக்கூடுமன்றோ. ஆனால் இது அஞ்ஞானத்தால் வராததாயும் யோகத்தால் சிக்ஷை அடைந்ததாயுமிருத்தல் வேண்டும். இரண்டாம் பாசுரத்தில் "மாயோனே" என்று விளிப்பதாலும் "உன்பெருமை மாசுணதோ" என்று சொல்லியிருத்தலாலும், பகவான் ஆழ்வார் முன்னிலையில் நின்றதாகக் கொள்ளத்தடை என்ன? ஆழ்வார் தம் தாழ்வை நிரம்பத் தன்மேல் ஏறிட்டுக் கொண்டிருக்கும் ஸமயத்தில், உத்கிருஷ்டமான யோகிகள் செய்யும் பூஜையை ஏற்கும் எம்பெருமான் ஸந்நிதானத்தில் ஆழ்வார் மனம் அவரை நிற்கவைக்க இசையுமா? ஆதலால்தான் ஆழ்வார் அகலுகிறார் என்ற உரை சரியே. மூன்றாவது பாசுரத்தில், முழுவதும் கலவாமல் ஒருவாறு பகவத் சந்நிதானத்தில் தங்கி நின்றனர் என்று உரையிட்டது சரியே. இப்படியில்லாமல் அவர் அகன்றிருந்தால், அவரது தாய்போன்ற வாத்ஸல்யத்தையும் திருவிக்கிரமாவதாரத்தில் எல்லாருக்கும் ஒக்கத் தம் திருவடிகளை உய்யுமாறென்றும் உய்விடமென்றும் காட்டிய ஸௌசீல்யத்தை எங்கு இருந்து எப்படிப் புகழ்வார்? மேலும் அப்பாசுரத்தில் "தான் ஓர் உருவன்" என்று மேம்பாடாகப் புகழ்கூற நியாமில்லை. நாலாம்பாசுரத்தில் நாம் ஸர்வதொண்டு செய்வோமென்று அறுதியிடுகிறார். எப்படியெனில் அவனது ஸௌசீல்யமும் வாத்ஸல்யமும் தப்போலிகளுக்கு உபகரிக்கவல்லவோ உளது? அது வியர்த்தமாகக் கடவதொன்று. அதை உபயோகப்படுத்தத் தாம் உளனாகவேண்டுமென்ற எண்ணம் ஆழ்வாரைத் தூண்டினதாகக் கொள்ளவேண்டும்— "எம்பெருமான்" என்ற பதம் அவனுக்குத் தாவிய உரிமை நமக்குளது என்று காட்டவந்த பிரயோகம்.

இப்பாசுரத்திலேயே பின்னர் "மற்றும் முற்றுமாய்" என்றதினால் அவனது சம்மந்தம் எல்லாருக்கும் உரியதென்றும், "மாமாயன்" என்பதால் அவனது திவ்வியசக்தியையும் வெளிப்படுத்துகிறார். மேல் ஐந்தாவது பாசுரத்தில், அவனது உத்கர்ஷத்தை "மாதவா" என்னும் பதம் குறிக்கின்றது. "கூன்" மாத்திரம் சிதையத் திருவிக்கரையை அழகுபடுத்தினதை அநுசந்திப்பதுடன் கிருஷ்ணவதார திவ்விய சேஷ்டைகளையும் பசுமேய்த்ததையும் நினைக்க இவர் உள்ளம் இரங்கி அவனது ஸௌலப்பியத்தில் தோய்ந்து அவனைச் "சேருமாறு நீ அருளாய்" என்ன இவரைத் தூண்டியது. ஆறாவது பாசுரத்தில், ராமவதாரத்தில் வானரங்களுடனும் பழகுதற்கிணங்கிய ஸௌலப்பியத்தை நினைந்து "கைவன்" என்று சொல்லிப் பின்னும் "நின்பாதம்சேருமாறு அருளாய்" என்று பிரார்த்திக்கிறார். இத்துணையும் தெருள்உற்றவர்க்குப் பகவான், "அநர்ஹன்" என்று அகலும் இகழ்ச்சியான மனோநிலையை அகற்றாது விடுவானா? இம்மனோநிலை ஒழிந்ததினால் ஆழ்வார் "தீரும் மருந்தானாய்" என்று புகழ்பவரும் ஆயினார். அடுத்த பாசுரத்தில், தாம் அவனைவிட்டு அகலாதது தம் குறையே என்று நினைக்கும் மனத்தினராய்க் கைவல்லியம் வேண்டுபவரைச் சிலாக்கியமாகப் பேசினாரெனினும் நம்மைபார்த்துச் சொன்னபடியே அன்றிப் பகவானிடத்தில் விமுகராக அவர் எத்தனிக்கவில்லை. ஏனெனில் அடுத்த பாசுரத்தில் "உண்டாய்" என்றும் "மாயோனே" என்றும் எதிரே விளிப்பதால் ஸந்நதியில் தான் கலவியை அபேக்ஷித்து நின்றார் என்பது தெளிவாகத் தெரிகிறது. கிருஷ்ணவதாரத்தில் கொஞ்சம்கூட எஞ்சாதபடி வெண்ணெயும்நெய்யும் திருடி அமுது செய்தது மண்கரைய மருந்தாகற் கன்று. தாம் யாதவர்களோடு திவ்விய சேஷ்டைகள் நடத்தாமல்போனால் தன்னையும் தரித்துநிற்க வொண்ணாத ஸௌலப்பியமன்றோ என்று, இந்தத் திவ்விய சரித்திரத்தை உய்த்துணர ஆழ்வாருக்கு மனதிலகப்படக்காட்டியபடியன்றோ? இந்தவிதந் தேறியதனாற்றான் ஆழ்வாரது கலங்கிய மனநீர்மை நன்குமாறிச் சுத்தமாயது. ஒன்பதாவது பாசுரத்தில் திரும்பியும் மேற்கண்ட கிருஷ்ணவதார பூதனை சம்ஹார திவ்விய சேஷ்டை அவருக்குத் தோன்றி வற்புறுத்தினதினால் இனி யாம் "மாயோம்" அதாவது அநர்ஹன் என்று விலக மாட்டோம், எவ்வுயிர்க்கும் உரித்தான அவனைச் "சார்ந்துவிடுவோம்" என்று பிரதிஞ்ஞை செய்துகொள்கின்றார். அடுத்தபாசுரத்தில், எல்லா மனக்கலக்கமும் தமக்குத் தீர்ந்ததென்று அறிவித்தற்பொருட்டுத் தம் திருவுள்ளத்தைப் பகவான் "மனம்வைக்கத் திருத்தினான்" என்கிறார். இதையே அடுத்த இறுதிப்பாசுரத்தில் "மாலே ஏறி மால் அருளால் மன்னும்" என்று தன் மனதைப்பற்றிக் கூறுகிறார்.

இலஞ்சிப் பாவை.

[476-வது பக்கத் தொடர்ச்சி]

18. மன்னனும் மாதும்.

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்.

போர்வீரர் கண்ணு மனமுங் கவர்ந்த ஒண்ணுதற் பாவை, படைத்தலைவன்பின் சென்று, மல்லிகையொடு மௌவலும் முகைசிறந்து பிணியவிழ்ந்து மணநாறும் வெண்மணல்பரந்த தண்பொழிலிடை, ஆடகத்தியன்ற ஒளிகிளர் மாடமொன்றிற் புக்காள். ஆங்குப் பன்னிறம் பயிலும் படிமக்கலங்களைத் துருவிய பரிதியின் கற்றையங்கதிர்கள் அறைகளைச் சிவப்பே, நீலமே, அஞ்சுபங் காட்டும் மஞ்சளே யென்ன அணிபெறச் செய்தன. அதனின் பொற்பை அற்பமெனக்கொண்டு அணங்கும், தனித்தீவில் மான்தோலே விலைபெறு விதானமாயமையத் தனது ஏவல் பார்த்து எகினம் அருகுநிற்ப, அருளொழுகு முகத்துடன் தந்தை தன்னை யண்டிநின்று, தான் சமைத்த குய்யுடை யடிசிலுண்டு தன்னையும் மால்வண்ணனையும் மகிழ்ந்து போற்றிய நாளையெண்ணி நைந்தாள். இவளுக்கெனச் சேடியர் கொணர்ந்துவைத்த சுவையுறு பண்டங்களனைத்தும் வறிதே யெறியப்பட்டன. தன்னகத்தே விளைந்த எண்ணங்களி லீடுபட்டவளாய்ப் புறத்தே நடைபெறும் விடயங்களை மனதிற் கொள்ளாது கிடந்தாளுக்கு, செவிவழிபுகுந்த இன்னிசை அவளையறியாது மெய்புளகிக்கச் செய்தது. இவ்விசை யெழும்பிய திசைநோக்கிச் சாளரத்தில் முகம் வைத்துக் காணாலும் சேணிடை யொருவன் காதற்பிரிவினாற் கரைந்து பன்னிய பாடல்களி னின்னிசை யதுவெனத் தோற்றியது. குரலும் பண்டே தான் பழகியகுரல்போற் றோற்றலும், கருத்தூன்றிக் கேட்கப் புகுமிடத்து, அருகேயுள்ள சிறைச்சாலையொன்றினின்று மால்வண்ணன் தன்னை யுன்னிப் பாடியபாட லதுவெனவவட்கு விளங்கியது. பாடலின் பொருளைக்கேட்டுப் பதைக்கு முளத்தள், காதலின் உணர்வுந்தூண்டக் கலங்கிய கண்ணினள், தந்தைக்கு மிவற்கும் நேரப்போவ தென்னையோவெனக் கவலுஞ் சிந்தையள்முன்ன ரங்கு விஜயன் தோன்றினான். தனதெண்ணஞ் சென்றவழி யிதுவென அணங்கறியாவண்ணம் அணங்கும் பிணங்கிய வுள்ளத்தை யீர்த்து அவனுக்கு முகமன்கூறி "வேண்டாது நீர் செய்த உதவிக்கு..." என்னத் தொடங்குதலும், விஜயன் "எனக்கோர் வந்தனமும் புகலற்க. உன்றனொப்புயர்வற்ற தந்தைக்கு உயிரளித்து வாழச்சொல்வது என்னா லியலாதன்றே. உனது அஞ்சுகமென்னக் கொஞ்சுங் குதலையை அரசன் கேட்க அவளை யழைத்துச்செல்லும் பேறென்றே என்னுடையது. அவனோ கொடுங்கோன் மன்னனல்லன். சிலபோது சினத்தாலும், தனக்கு வாய்த்த பதவியின் கோட்பாடுகளாற் கட்டுண்ணப்பட்டதாலும், மாசுண்ட மணியென்னத் தோற்றுவான். அவனது அவைகூடுங் காலமும் இதோ கிட்டிவிட்டது. அவ்விடம் அழைத்துச் செல்வேன் வருக" என்றுகூறி அவளை மெலலென நடத்தி, உடன்பிறந்தானொருவன் காட்டும் ஆதரங்காட்டித் தன்னுடன் கொண்டுசென்றான். அவ்வாறேகுங்கால் சுவரிடையே கரந்துறையும் சுரங்கத்தின்வழி சென்றார்முன் னோர் கதவு எதிர்ப்பட்டது. பித்திகையில் மறைக்கப்பட்ட இயந்திரமொன்றிற் கைவைத்து முடுக்குதலும் தாள்கள் தாமே திறந்தன.

உயர்ந்தும் அகன்றும் ஒளிகொண்டும் விளங்கிய அறையினுட் காரிருளினின்று கதமென நுழைந்த சுதஞ்சனைக்குமுன்ன ரெதிர்ப்பட்ட மந்திரக்கிழவரும் சுந்தரத் தோகையாரும், எழுந்த ஞாயிறு குடதிசை விழுந்து மறையும்போது, செங்கதிர்படர்ந்த கொண்டலினிடையே மண்டலங் காட்டுங்காலை மனதிற்குத் தோன்றும் பற்பல மாய உருவங்களேபோல் உண்மையற்று உருவெளித் தோற்றங்களென்னப் புலப்பட்டன. நாலும் முகமும் நடுக்குறு காலுங் கொண்டு, நான்கடி வைத்துநடந்து, பின் முகமேறிட்டுத் திருவோலக்கத் தலைவனை, தான் நாடிய பொருளைக் கைகூட்டிவைக்கும் நாயகனை, வாய்ச்சொல்லா லீருயிரை வாழவைக்கும் வள்ளியோனை ஆவலுட னவளும் நேடினாள். கலக்கமுடன் கண்டாட்குக் காவலன் கட்புலனாகவில்லை. மீண்டும் புரவலர்க்குரிய தோற்றமும் உருவமும் உடையுமுடைய பலரை நோக்கி யிவரோ யிறைவ ரிவரே அரசரென அயிர்த்தயிர்த்தவ ளாய்தலும் கூப்பிய கரத்தராய அவர்தமி லெவரும் அரசரல்லரெனத் தெளிந்தாள். அனைவர்நாட்டமும் ஒருவன்மேல் செல்கின்ற பரிசு கண்டு திடுக்கிட்டுத் திரும்பிநோக்கலும், அளிகொள் அலரென அவையினர் பார்வைபாயக் களிகொள்ளும் முகமும் விஜயன்முக மொன்றேயென் றறிந்தனள். அவனொருவனே அங்குக் கைகூப்பாதவன்; அவனொருவனே இடையி லுத்தரீயத்தை வணக்கமுடன் இறுக்கிக் கட்டாதவன்; அவனொருவனே பாதுகையணிந்த அடித் தலத்தினன். விலைபெறு பட்டும், கலையுடையிழைகளுங் குழைகளுங்கொண்ட குறுநிலமன்னரிடையே, அணிகலனொன்று மில்லாது பசியஉடையே பட்டுடையாகப் புனைந்துநின்றவனும் முன்னம் காதல்தான் பற்றியீர்க்கக் காவலின்றி அக்காடும் மலையுங்கடந்து எளியனாய்த் தன்முன் னின்றவனுமாய விஜயனே, கோக்கள்வைகு முற்றத்தில் முடிமன்ன ரடிவணங்கி வடுப்பட்ட தாள்களும், தனதுயி ரனையாரிருவர் பொதிந்துள சிறைச்சாலைகளின் தாள்திறக்கும் தாள்களுமுடைய அண்ணலெனத் தெளிந்தாள். தெளிதலும் பிறங்கலிடை யுறங்குங் கொண்மூப் பிரிந்தெழுந்துபோதல்போல், சுதஞ்சனையும்விஜயனை விட்டுப்பிரிந்து அகலநின்று அடிவணங்கி வாய்விட்டோர் மொழியும் புகல நாவெழாது துன்பமே யவளை யடிமைகொள்ள விம்மலுற்றுக் கிடந்தாள். மன்னனுக்கு இக்கோலத்தைக் கணமேனுங் காணக்கூடவில்லை. உடனே அவளை மெல்லெனத் தூக்கி, அவையிடைப் பிறந்த நகையை போர்பார்வையா லடக்கி, அஞ்சாதொழியத்தெருட்டி "அழகுடையாய்! காட்டில் திரிந்த ஏழையேன், விஜயனே, இந்நாட்டின் ஏந்தல். நீவிழைவதை அவனிடங் கேள். ஆழியோடுனக் கன்றனளித்த மொழியை யிவ்விடம் மீட்பான். ஸ்ரீபாலனைப் பற்றி ஒன்றுங் கேளாதே. நேற்றிரா அரசனும் அவனும் ஒன்றுகூடிப் பேசியதில் பலவிடயங்கள் விளங்கின. அவர்களொருவருக்கொருவர் குற்றங்களை மன்னித்துக்கொண்டனர். கோட்சொல்லிகளா லவனுக்கும், அவனலன்றி அவனது சுற்றத்தாரால் எனக்கும் தீங்குகள் விளைந்தன. அன்று குடிகள் எல்லைகடந்து, வழிதப்பிப் போயதால் அவர் விரும்பியவண்ணஞ் செய்தல் தகாதென்று ஒழித்தோம். பின்னர் நீதிமன்றத்து நெறிப்படி ஆராய்ந்து, எமது மந்திரக்கிழவர் துணைகொண்டு அவனைப் பிழையற்றவன் என்று கண்டுதெளிந்தோம். அவனுக்குப் பகையாய பிரபுக்க ளிருவருக்கும் இவ

னுக்கும் கட்பூட்டினேம். இனி யுன் தந்தை நமது உண்மை நேயன். என்ன! என்ன! அழலோன் ஒளியை மறைக்கும் மேகங்களென்ன, நின்முகவொளியை மழுங்கச்செய்யும் நம்புதலற்ற எண்ணங்க ளேனோ! ஓ ஸ்ரீபால! நீ நேரில் வந்தாலன்றி நம்பா ளென்பெண்" என்னலும் அக்கூட்டத்தைவிட் டவனும் தாவிவரக் கண்ட நங்கையின் உள்ளடங்கிய உவகைவெள்ளம் புறத்தே பொழிதர, வற்றல்மரம் தளிர்த்ததென்ன அவன்கழுத்திடை நங்கையும் வளர்ந்தாள். கண்கொளாக்காட்சி யிதுவெனக் கண்ட காவலனும், அக்காலை அரசர்க்குரிய ஆணையை நல்வழி உய்த்திடின், உலகில் துன்பம், மிடி, பயநோய், பகைகளால் நலியும் நல்லொழுக்கமுடைய மாந்தர்க்கு நன்மைபயக்கும் என்னுமவ்வாய்மையைத் தெளிந்து களித்தான். "ஸ்ரீபால! அவளை உள்ளழைத்துச் செல்லாதே. அவள் இங்கு வந்தகாரணத்தை யாம் அறிதல்வேண்டும். சுதஞ்சனா! யாம் மாறுவேடம்பூண்டு எமது உண்மைநிலையை ஒளித்து உலவுங்காலத்து யாம் கொண்டபெயரும் எமக்குரியதே. என்னை என்தாய் விஜயசேனனென் றழையாது விஜயனென்றே விளிப்பாள் அக்கோலத்தோடு யாம் நாட்டில் நடைபெறு காரியங்களனைத்தையும் கண்ணுற் கண்டு, நீதி கடந்தவரை ஒறுத்தும், நியாயப்படி நடந்து வறுமையுற்றவர்க்கு வெகுமதி யளித்தும் இந்நாட்டைப் போற்றுவோம். (தாழ்ந்த குரலில்) "ஓ இராஜத்துரோகி, காந்தமென வுன் கண்ணா லிழுக்கப்பட்டு, என்பதவிக்கன்றி நற்குணத்திற்கே யென்னை யொருத்தி வரைந்துகொள்வளோ எனக் கண்டறிய, நாடெலாங்குழம்பிக் கேடுறக்கிடந்த காலத்தில் தனியே கானகத்தில் திரிந்து இருமுறை யான் உயிரிழக்க விருந்ததையும், சிறுகுடிப் பிறந்த வொருவனென்னக் காதல்வாய்ப்பட்டுக் கலங்கியதையும் ஒருவரும் அறிய வொண்ணாது. (உரத்தகுரலில்) இன்னும் என் ஆழியைக் கையிற் கொண்டுள்ளாய். உற்றகுறை யுரைக்க" என்றான்.

அரசன் குறிப்பிட்டுக் கூறுவது தன் னகத்துறையும் மறைவெண்ணங்களையே யென்பதை யுணர்ந்தாளாகி அவனது பரிகசத்தால் மால்வண்ணனுக் குறுதீங் கொன்றுமில்லையென்று தேர்ந்து, தன் தகப்பன் பொருட்டும் தன்பொருட்டும் படையொடு புடைபெயர்ந்த இராதாகிருஷ்ணன்பால் கருணைகாட்டுமாறு தன்னலம்பாராட்டாப் பெருமாட்டியுமிரந்தாள்.

அரசன்:—"அதனை யொழிக்க! அரசர்க்கரசனை ஆண்டவன் ஒருவனாலேதான் சிறைவிட்டெழும்பிய உயிரைக் கூம்பை புகுத்திடக்கூடும். அன்னவன்றன் உண்மைஉள்ளத்தை யாம் அறிவோம்; அவனது கைவலியையு மறிவோம். அவனுட னுண்டுகளித்தோம்; விண்டுவெகுண்டோம். அவனுயிரைமீட்க எம்முடை அரசிற் பாதி தருவோம். அதனாலினிப் பயனுண்டோ! நிற்க! நீ எம்மிடங் கேட்பது வேறொன்று மில்லையோ? வேறெவரையுஞ் சிறைமீட்க வேண்டாவோ?" என்னக்கேட் டவ் விரங்குநெஞ்சத்தாள், செக்கர்வானமெனக் கன்னங்கள் சிவப்ப, தன் றாதைபால் திரும்பி மால்வண்ணா னுயிரை யிரக்கச்சொல்வதுபோல் அவனிடமவ் வாழியை நீட்டினாள்.

அரசன்:—"ஓகோ! அவ்வாழி வலியற்றுப் போயிற்று. உனக்கன்றி வேறெவர்க்கும் வரங்கொடுப்பதாய் யாம் வாக்களித்திலம். ஹே! மால்வண்ணா! (மால்வண்ணன் வந்து முழந்தாளிட்டு வணங்கி நிற்க) உன்பொருட்டு உயிர் வேண்டுவார் யாருமிலர். ஆதலின் நீதிப்படி நியாயஞ்செலுத்துதல் எமது கடன். கெடுமதிகொண்ட இளைஞ! எம்மிடம் வளர்ந்த நீ எமது சோறுண்டு, எமக்கே வேர்ப்புழுவாயினை! யாம் உன்னிடங்காட்டிய அன்பிற்குக் கைம்மாறாக, உனது தாயத்தாரை என்னிடம் முரண்கொள்ளத் தூண்டினை. இவையனைத்தும் நாடுதுரத்தப்பட்ட ஒருவனுக்கு அடைக்கலமளிக்கச் செய்தவை. இது நீதிப்படி அரசத்துரோகமாம். அதற்குத் தக்கபடி உன்னை ஒறுப்பதே தலை. உனக்குத் தளைச்சங்கிலியும் சிறைக்காவலாளியுமே ஏற்றவை" என்றுகூறி, முத்தாரமொன் றெடுத்தவன்கழுத்திற்போட்டு, மெல்லென இழுத்து, அதன் முகப்பைச் சுதஞ்சனையின் கையிற் றந்தான்.

இலஞ்சிப்பாவை முற்றிற்று.

மௌவல் - முல்லை. ஆடகம் - பொன். படிமக்கலம் - கண்ணாடி. அம்சுபம் - அழகிய மங்களமான விடயம். விதானம் - மேற்கட்டி. எகினம் - நாய். குய்உடை - வாசனை உடைய, அல்லது தாளித்த கறிகளோடுகூடிய. அம்சுகம் - அழகியகிளி. பித்திகை - சுவர். குடதிசை - மேற்கு. நாலும்முகம் - கீழ்குனிந்த முகம். திருவோலக்கம் - இராஜசபை. அளிகொள் - வண்டுகள் மொய்க்கும். பிறங்கல் - மலை. கொண்மூ - மேகம். ஏந்தல் - அரசன்.

ஸ்ரீ. சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய தமிழ் வேதங்கள்

ஸ்ரீ ஆத்ம புராணம் ரூ. 8, ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை வசனம் ரூ. 5, நியாயப் பிரகாசம் வசனம் ரூ. 4, வேதாந்த மகா சிந்தாமணி ரூ 4, தத்துவாநு ஸந்தானம் ரூ 2-8, நியாய முக்தாவளி அணா. 12, தோத்திரயம் (பகவத்கீதை, ஈசுவரகீதை, பிரமகீதை வியாக்கியானத்துடன்) ரூ. 2, வருத்தி பிரபாகரம் ரூ. 4.

ஆரணி. குப்புசாமி முதலியார் இயற்றிய துப்பறியும் புதிய நாவல்கள். நிகரற்றவை!

இரத்தினபாய் அல்லது இந்திரஜாலக் கள்ளன் ரூ. 2-8, கடற்கொள்ளைக்காரர்கள் (2-பாகம்) ரூ. 3-4-0 இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ரூ. 2, கிருஷ்ணவேணி ரூ. 2, சந்திராபாய் அல்லது சங்கரதாஸன் வெற்றி ரூ. 2, இரத்தின புரியின் இரகசியம் (மூன்று பாகமும்) ரூ. 6, கைவல்லிய நவநீத வசனம் ரூ. 1-8, ஆனந்தசிங். ரூ. 2.

இதர புஸ்தகங்கள்.

மாதவி மாதவன் அல்லது ஓர் அதிசயமான சாமார்த்திய ரயில்வேக்கனவு (2 பாகம்) ரூ. 2, விக்ரமாதித்தியன் கதை ரூ. 2, வில்லிபாரத வசனம் அல்லது மகாபாரத வசன சங்கிரகம். (750 பக்கங்கள்) ரூ. 3, கைத்தொழில் முறைகள் ரூ. 1-8, வர்த்தகக் கணித நூல் அல்லது, தமிழ்புக்கீப்பிங் ரூ 2, பாரிசக்கதைகள் ரூ. 3, வேதாந்த பாஸ்கரன். ரூ. 8.

V. S. T. Swamy & Co., Book Binding and Novel Depot,
VEPERY, P. O., MADRAS.

வர்த்தமானம்

சைமன் கமிஷன் அறிக்கை.

இந்திய வரசியல்சீர்திருத்த விஷயமாய் நியமிக்கப் பெற்ற சைமன்கமிஷனர் தங்கள் அறிக்கையின் முதல் பாகத்தை வெளியிட்டனர். இரண்டு பாகமாகப் பிரிக்கலான இவ்வறிக்கையின் முதல்பாகம், இந்திய அரசியல் சமூகநிலையை விரிப்பதாகும்; இரண்டாவதில் கமிஷனது முடிவுகள் கூறப்படுமாம். முதல் பாகச் சுருக்கம் வருமாறு:—

1917-ம் வருஷம் இந்தியாவின் மந்திரியாயிருந்த மாண்டேகு கூறியபடி இந்தியா, குடியேற்றநாட்டு அந்தஸ்த்துப் பெறலாகும் என்பதை அடிப்படையாகக் கொண்டே நாங்கள் முடிவுசெய்துள்ளோம். இந்தியாவில் பல ஜாதியார்களும் மதத்தினரும் இருப்பது பற்றியே அரசியல் இயக்க வளர்ச்சியைக் குறைத்துக் கூறுவது தவறாகும். இந்தியாவிலுள்ள கிராமங்களின் நிலையில் தற்காலவளர்ச்சிக்கேற்ற மாறுதல்கள் ஏற்படவில்லை என்பதுண்மையே. என்றாலும் படித்த வகுப்பினரும், மந்திரிகளும் அங்குச் செய்துவரும் வேலை பாராட்டுதற்குரியதே. கிராமவாசிகளது பழக்க வழக்கங்கள் ஒழியவும், அரசியல மனப்பான்மை அவர்களிடம் ஏற்படவும் இன்னும் நாள்செல்லும் என்பதே எங்கள் அபிப்பிராயம்.

இந்தியாவில் வியாபாரமும் தொழில்களும் வளர்ச்சியுறுவதால், நடுத்தரமான நகரங்களின் ஜனத்தொகை குறைந்து, பெரிய பட்டணங்களில் ஜனத்தொகை அதிகமாகின்றது. அவ்விதம் பெரிய நகரங்களில் வசிக்கும் தொழிலாளிகள் தாங்கள் சாச்வத நகரவாசிகள் என்று நினைப்பதில்லை. தொழிலாளிகளின் நிலைமை சரியானபடி மேன்மையுறப் பலவிதமான காரியங்களைச் செய்யவேண்டும். இது நிற்க, நகரங்களில் இருக்கும் படித்தவகுப்பினர் ஒருதனி வகுப்பினர்போல் வாழ்கின்றனர். இவர்கள் மேனாட்டு பாஷை படிப்பதும், அதிலேயே நினைப்பதுமாய் இருந்து மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றி வருகின்றனர் எனவே, படித்தவர்களுக்கும், சாமான்ய ஜனங்களுக்கும் அதிகமான தொடர்பு ஒன்றும் இருக்கின்றதில்லை.

இந்தியாவில் ஹிந்து, முஸ்லிம், பௌத்தர், ஜெயினர், சீக்கியர், கிறிஸ்தவர் ஆய பலவகுப்பினர் இருப்பதால் வகுப்புத்தொல்லை இல்லாமலில்லை. வகுப்பு வித்தியாசங்கள் பாராட்டப்படுவதற்குக் காரணம் கலப்பு விவாகவழக்க மில்லாமையே யாகும். இந்துமுஸ்லீம் சண்டைகள் மதவிஷயமாய் ஏற்படுவதாயினும், இதற்கு அரசியல்செல்வாக்கைப் பெறும் போட்டியே காரணமாகும். மாண்டேகு சீர்திருத்தத்திற்குப் பின்னர் வகுப்புச் சச்சரவுகள் அதிகமாய் ஏற்பட்டுள்ளன வென்பதை, இந்து முஸ்லீம் வகுப்பினர் கொடுத்த சாட்சியங்களிலிருந்து அறியலானோம். வகுப்புவாரி முறை வகுப்புஞாபகத்தை நிலைநிறுத்தக் கூடியதெனினும், பொதுப் பிரஜா உணர்ச்சி ஏற்படுவதால் வகுப்புப் பயம் ஒழிந்து, வகுப்புமுறை அனாவசியமாய்ப் போகும்காலம் வரும் என்று சொல்கின்றபடி நடைபெறவேண்டு மென்பதே எமது விருப்பம்.

ஸ்திரீகளது முன்னேற்றம் போதுமானபடி யில்லை என்றாலும், முயற்சிகள் நடந்து வருகின்றன. மாதர் பலர் பால்யவிவாஹம் கோஷா முதலிய முறைகளை அகற்றப் பாடுபடுகின்றனர். எனவே ஸ்திரீ மனோபாவத்தில மாறுபாடு ஏற்பட்டுள்ளது. இம்மாறுபட்ட மனோபாவத்தால் பெண்கள் சீக்கிரத்தில்முன்னேற்றம் பெறுவர். இப்பொழுது உபாத்திமைத்தொழிலிலும் வயித்தியத்தொழிலிலும் ஈடுபட்டுள்ள மாதர்களின் தொகை மிகவும் குறைவாக விருக்கிறது. மாதர்கள் கல்விகற்று, பொதுவாழ்வில் தங்களது இடத்தைப் பெறுதவரையில் இந்தியா அடைய விரும்பும் அரசியல் செல்வாக்கைப்பெற வியலாது.

இராணுவத்தில் இப்பொழுது மாறுதல்கள் செய்வது கடினமானது. அவசரமாக ஏதாவது செய்தால் நாட்டின் அமைதி பாதிக்கப்படும். ஆனால் பிரிட்டிஷார் சாத்தியமானவகையில் இந்தியருக்கு ராணுவ விஷயத்தில் ஈடுபட அவகாசம்தர முயலவேண்டும். இந்திய அரசியல்வாதிகளும் நிலைமைதெரிந்து அதற்கேற்றவாறு கூட்டுறவுதந்து உதவவேண்டும்.

இந்தியாவில் பல கட்சிகள் இருப்பினும், கட்டுப்பாடும் கட்சிக்கொள்கையு முள்ளது சுயராஜ்யக் கட்சிதான். அக்கட்சியார் சீர்திருத்தத்தைப் பிரயோசனப் படுத்திக்கொள்ளவில்லை. சென்னையில் 1920-ல் ஜஸ்டிஸ் கட்சியினர் அதிகாரம் பெற்று நீண்டகாலம் கட்சிபலத்துடன் இருந்தனர். பொதுவாகச் சட்டசபையில் எதிர்க்கட்சியார், சட்டசபையின் பொறுப்பு அறிந்து நடந்துகொள்ளவில்லை. எதிர்ப்பதே தொழில் எனக்கொண்டனர். என்றாலும் சீர்திருத்தத்தால் சிறிது பயனும் ஏற்பட்டுள்ளது.

இந்தியாகவர்ண்மெண்டுச் சட்டசபைகளில், கட்சிக்கொள்கை மேலெழுந்திருந்ததே ஒழிய, தங்களைத் தெரிந்தெடுத்த வாக்காளர் நன்மையை அங்கத்தினர் நாடியதாகத் தெரியவில்லை. இந்தியச் சட்டசபைத் தலைவரும் தமக்கு இல்லாத அதிகாரத்தையெல்லாம் இருப்பதாக வைத்துக்கொண்டு, காரியங்களைப் பார்லிமெண்டு முறைகடந்து செய்துவந்திருக்கின்றார். ஸ்தல சுயஆட்சி விஷயமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற முழு அதிகாரம் சரியானபடி பிரயோகம் செய்யப்படவில்லை என்றே நினைக்கின்றோம்.

மாண்டேகு சீர்திருத்தத்திற்குப் பிறகு கல்விக்காக அதிகப்பணம் செலவாயிருக்கின்றது என்றாலும், செலவிற்கு ஏற்றபலன் ஏற்படவில்லை. 1922ம் 23 வருஷங்களில் 30 லட்சம் பையன்கள் மூன்றாவது வகுப்பில் படித்தார்கள். அவர்களில் 685101 பையன்களே மேல்வகுப்பிற்குச் சென்றனர். பெண் கல்வி விஷயமும் திருப்திகரமாயில்லை. பொதுவாய்க் கல்வி விஷயத்தில் மாறுதல்கள் ஏற்படவேண்டும்.

பொது ஜனங்களிடையே இன்னும் அரசியல் உணர்ச்சி ஏற்படவில்லை. 5 இலட்சம் கிராமங்களில் வசிக்கின்றவர் ராஜீயஉணர்ச்சி யில்லாதவர்களாகவே இருக்கின்றனர். வெகுகாலமாக சுய ஆட்சியை அனுபவித்து வரும் பிரிட்டிஷார், இந்தியரின் அரசியல் முன்னேற்றத்தில் அநுதாபமுடையவர்கள். இந்தியா சுய ஆட்சிபெறுவதற்குத் துணைசெய்யப்பிரிட்டிஷார் கடமைப்பட்டிருக்கின்றனர். இந்தியா இப்பொழுது இருக்கும் நிலைமைக்குக் காரணம் நீண்டகாலமாக இந்தியாவில் இருந்துவரும், சமூக பொருளாதார வழக்கங்களே யாகும். கல்வியால் அவ்வழக்கங்களை இந்தியர் அகற்றிக் கொள்ளலாம். பிறர்மீது குற்றம் கூறுவதால் இக்குறைகள் அகலா. எனவே இந்தியர்கள் தங்களிடம் இருக்கும் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்துகொண்டால், அரசியல் அபிவிருத்தி ஏற்பட்டுவிடும்.

அறிக்கை:—அடுத்தவாரம் நமது காரியாலயத்திற்கு ஓய்வுநாட்களாதலால் பத்திரிகை பிரசுரமாகாது. அடுத்த இதழ் ஜூலை மாதம் 3உ வெளிவரும். மானேஜர்.

1930-ம் வருஷத்திய வால்யூம் 3. அட்டவணை

(ஜனவரி முதல்—ஜூன் வரையில்)

தலையங்கம்.

இதழ்			பக்கம்.
1	அரிமா நோக்கு ...		... 1
2	அறியாமை வேண்டப்படும்	1	... 21
3	,, ,, ...	2	... 41
4	,, ,, ...	3	... 61
5	,, ,, ...	4	... 81
6	சுயநலச் சோதனை ...	1	... 101
7	,, ,, ...	2	... 121
8	,, ,, ...	3	... 141
9	,, ,, ...	4	... 161
10	,, ,, ...	5	... 181
11	,, ,, ...	6	 201
12	,, ,, ...	7	... 221
13	,, ,, ...	8	... 241
14	விஷயத்திற் கேற்ற விளம்பரம்		... 261
15	இருபக்கம் எதற்கு முளது		... 281
16	முயலுக்கு முயலவேண்டா		 301
17	ஒக்கநினைப்பார் உறவு ...		... 321
18	நல்லோர் கடன் ...		... 341
19	எத்தைக்கண்டு இச்சைகொள்வோம்		... 361
20	அலையடங்கக் காக்க வேண்டா		... 381
21	விளம்பிஞல் வெட்கக்கேடு		... 401
22	தர்க்கத் தளர்ச்சி ...		 421
23	கல்லாதபேர்களே நல்லவர்களோ	1	... 441
24	,, ,, ...	2	... 461
25	,, ,, ...	3	... 481

கம்பராமாயணம்— அயோத்தியாகாண்டம்

மந்திரப்படலம்.

1	முன்னுரை	3
2	கடவுளொன்ற கொள்கையைக் காத்தலி னவசியம்	34
3	இருப்பதே துணையென இலங்கு மேன்மையோர்	53
4	அமைச்சரின் னமைதியை யாய்வத னருமை	73
5	வியாதன் தீட்டிய வேந்தன் சித்திரம் ...	96
6	மன்னர்க்கு முண்டோ மறம் ...	117
7	இறையோவிது முறையோவென மொழிமூன்றினி லறைகூவுவர்	126
8	அறமது முதல் சார்பென விருவகைத்தே	154
9	நல்லோ ரல்லால் வல்லவ ரில்லை ...	165
10	படையும் பொருளு மடைவிலா வரசு	195
11	பிள்ளைமதி யெதுவோவெனப் பேதுறவே வைத்தாரோ ...	214
12	எய்யுமுன் னென்னை யைய வேதென நினைத்தாய் கொல்லோ ...	225
13	யாவதோ நின்கருத்து நம்பிநீ யியம்பு கென்றான்	253
14	சார்பற வாதந் தன்னில் தேவனே தோற்று னம்மா	273
15	முதுமை யின்றேற் கதையு மில்லை	295
16	ஆசையாற் புரிந்த வெல்லாம் அவலமாய் முடிந்த தன்றே ...	316
17	மைந்தன் புகழுந் தந்தைக் குரியது ...	337
18	மாறு மரபினர் மன்னனொடு மைந்தர் ...	355
19	ஏற்போ ரென்னக் கொடுப்போர் மேன்மை	373
21	பாரமோ வரச போகமோ படைத்தான்	416
22	போகம் புசிக்குமொரு சோகச் சித்திரம்	435
23	தந்தையு மைந்தனுங் கம்பரை நம்பார்	455

மந்தரை சூழ்ச்சிப் படலம்.

24	முதலுங் கடையும் முடித்தனர் கம்பர்.	468
25.	கலையினருமையை யுயர்வுற வமைத்தலிற் காண்க	484

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

இதழ்		பக்கம்.
1	அறுபத்திநான்கு கலைகள்	9
2	அவிநயக்கலை—கருவிகள்	23
3	,, களன்கள்	43
4	வீணை—வீணையும் யாழும்	63
5	,, ,, ...	83
6	,, ,, ...	103
7	குழலின் ஏற்றம்	123
8	குழலின் வகை	143
9	மிருதங்கமுந் தாளமும்	163
10	,, ,, ...	183
11	நிருத்தம்	203
12	நிருத்தம்—சத்தப் பிரமம்	223
13	சத்தப் பிரமம்	243
14	,, ,, ...	263
15	யுத்தக் கலை	283
16	,, போர்முறை ...	303
17	,, வஞ்சி	323
18	,, உழிஞை-தும்பை	343
19	,, வாகை-காஞ்சி-பாடாண்டிணை	363
20	,, பாடாண்டிணை	383
21	,, ,, ...	403
22	,, ,, ...	423
23	,, ,, ...	443
24	வில்வித்தை — ல்லின் ஏற்றம் ...	463
25	,, வில்லின் அமைதி ...	483

இலஞ்சிப் பாவை.

1	மான் வேட்டை	12
2	பாவையைக் காணல்	33
3	ஆருடம்	52
4	கணைக் காணல்	71
5	சுதஞ்சனை தன்னுள்ளக் கருத்துணர்தல்.	93
6	இராதாகிருஷ்ணன் வருகை ...	115
7	,, ,, ...	135
8	,, ,, ...	152
9	இராதாகிருஷ்ணன் சீற்றம் ...	170
10	காத்தன் பிறப்பு	193
11	கரிக்கோல் சின்னம் சுற்றியகோலம் ...	213
12	,, ,, ...	233
13	இராதாகிருஷ்ணன் தளர்ச்சி ...	251
14	வல்லணங்கு வழிபாடு	275
15	காதலியப்பல் ...	294
16	,, ,, ...	313
17	சிறைப்பட்ட சிற்றிடையாள் ...	331
19	,, ,, ...	367
20	வாட்போர் ...	391
21	,, ,, ...	407
22	ஸ்ரீபாலன் மன்னனைக் காணல் ...	430
23	மேகநாதன் ...	453
24	இராதா கிருஷ்ணன் முடிவு ...	475
25	மன்னனும் மாதும்	493

மானத சாத்திரம்

இதழ்.		பக்கம்.
1	நடத்தை—பொது விடயங்கள் ...	7
2	,, ...	25
3	,, ...	44
4	,, ...	75
5	,, ...	87
6	,, ...	105
7	,, ...	128
8	,, ...	145
9	,, ...	167
10	,, ...	188
11	,, ...	205
12	,, ...	230
13	,, ...	249
14	,, ...	267
15	,, ...	287
16	,, ...	307
17	,, ...	327
18	,, உணவுநாட்டம், குழுநாட்டம்	353
20	,, கட்டியமைத்தல் அழுகை தன்னெடுப்பு தன்னொடுக்கம் ...	394
22	,, சிரிப்பு	427
23	,, புணர்ச்சி, இணைவிழைச்சி ...	448
24	,, விளையாட்டு, சாயல் பிடித்தல்	473
25	,, அறிவுச் செயல் ...	487

நம்மாழ்வார் வைபவம்.

1	தத்துவ விசாரம்		11
2	சுத்தாத்ம தரிசனம்		27
3	,, ...		50
4	பிரம்மாண்டத்தின் அமைப்பு ...		66
5	திருவாய்மொழியின் ஏற்றம் ...		85
6	கம்பரும் ஆழ்வாரும்		113
7	முதல் பத்து—விமர்சம்		132
8	,, முதல்பதிகம் பாசுரம்	1—5	147
9	,, ,,	6—8	172
10	,, ,,	9—11	189
11	,, இரண்டாம்பதிகம் பாசுரம்	1—4	211
12	,, ,, ,,	5—11	228
15	,, மூன்றும்பதிகம் ,,	1—2	289
16	,, ,, ,,	3—7	311
17	,, ,, ,,	8—11	330
18	,, நாலாம்பதிகம் ,,	1—3	347
19	,, ,, ,,	4—7	365
20	,, ,, ,,	8—11	388
21	,, ஐந்தாம்பதிகம் ,,	1—3	412
23	,, ,, ,,	4—6	447
24	,, ,, ,,	7—11	470
25	பெரியோருரை நிர்வாகம் ...		491

குறுந்தொகை.

14 பெருந்தேவனார், திப்புத்தோளார், இறையனார், தேவகுலத்தார், காமஞ்சேர் குளத்தார், நரிவெரூத்தலையார், ஆலங்குடி வங்கனார், கயமனார், ஓரம்போகியார், மாமூலனார் (1-11)—269.

15 ஓதலாந்தையார், கபிலர், தொல்கபிலர், பாலை பாடிய பெருங்கடுங்கோ, பாலைபாடிய பெருங் கடுங்கோ, பேரெயின் முறுவலார், கபிலர், பரணர், கோப்பெருஞ்சோழன், ஓதலாந்தையார். (12-21)—291.

16 சேரமானெந்தை, ஔவையார், பரணர், கபிலர், வெள்ளிவீதியார், கொல்லன் அழிசி, ஔவையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், ஆதிமந்தியார். (22-31)—308.

17 அள்ளூர் நன்முல்லையார், படுமரத்து மோசிகீரனார், கொல்லிக் கண்ணன், கழார்க்கீரனெயிற்றியார், பரணர், பாலைபாடிய பெருங்கடுங்கோ, கபிலர், ஔவையார், செம்புலப்பெயல் நீரார். (32-40)—325

18 அணிலாடு முன்றிலார், கபிலர், ஔவையார், வெள்ளி வீதியார், ஆலங்குடி வங்கனார், மாமிலாடன், நெடு வெண்ணிலவினார், பூங்கணுத்திரையார், அம்மூவனார், குன்றியனார், குன்றியனார், பனம்பாரனார் (41-52)—348.

19 கோப்பெருஞ் சோழன், மீனெறி தூண்டிலார், நெய்தற் கார்க்கியனார், சிறைக்குடி ஆந்தையார், சிறைக்குடி ஆந்தையார் (53-57) 375

20 வெள்ளி வீதியார், மோசிகீரன், பரணர், தும்பிசேர்கீரன், சிறைக்குடி ஆந்தையார், உகாய்க்குடிகிழார், கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார், கோவூர் கிழார், கோவத்தன், அள்ளூர் நன்முல்லையார். (58-67)—385

21 அள்ளூர் நன்முல்லையார், கடந்தோட்கர வீரர், ஓரம்போகியார், கருவூர் ஓத ஞானியார், மன்னனார், பரணர், விட்டகுதிரையார், படுமரத்து மோசிகீரனார் (68-75)—405

22 கிள்ளி மங்கலம் கிழார், மதுரை மருதனிள நாகனார், நக்கீரனார், குடவாயில் கீரத்தனார், ஔவையார், வடம வண்ணக்கர், கடுவன் மள்ளனார் (76-82)—425

23 வெண்பூகனார், மோசிகீரன், வடவண்ணக்கன் தாமோதரனார் வெண்கொற்றனார் (83-86)—445

24 கபிலர், மதுரைக் கதக்கண்ணனார், பரணர், மதுரைஎழுத்தாளன் சேந்தன்பூதன். (87-90)—464

தமிழ்ப் பாடம்

வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

பக்கங்கள்:—5, 29, 46, 69, 90, 110, 130, 150, 174, 90, 206, 235, 245, 264, 286, 304, 334, 345, 369, 396, 414, 433, 451, 466.

நாயன்மார் சரித்திர உண்மை.

2	புனைந்துரை—வன்றொண்டர் சரிதை ...	31
3	அடியார் சரிதையும் சான்றும் ...	48
4	சிவனடியார் கலி நீங்கல் ...	68
5	சோழரும் சைவரும், குல வேறுபாடு ...	89
6	புறச்சான்றுகள் ...	109
7	கமோள சம்பவங்கள் ...	125
8	திருவானைக்காவல் சிலந்தி ...	149

ஆச்சரிய சூடாமணி

8	பர்ண சாலை யங்கம்	155
9	,, ...	169
10	சூர்ப்பணகை யங்கம்	185
11	மாயா சீதை யங்கம்	209
12	,, ...	231
13	,, ...	247
14	ஜடாயு வதை யங்கம்	272
15	அசோகவன வங்கம்	290
16	,, ...	315
17	,, ...	333
18	கணையாழி யங்கம்	351
19	,, ...	371
20	சூடாமணி யங்கம்	389
21	,, ...	409

பிற விடயங்கள்.

1	அண்டபுராணம்—கொதுகின் கதி.	14
	பழமுதிர் சோலை—இழுதையறிவு	16
3	மதிப்புரை—நளாயனி வெண்பா ...	56&76
5 & 6	மொழி பெயர்ப்பு—சூரத்நகர் காப்பிக் கடை (டால்ஸ்டாய்)	92&107
14	மலர்வனம்—நக்கண மேகம் நக்கண முல்லை	256
24	வாழையும் புலவனும்.	472

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர் சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்ட தெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 3.

ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1—8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக்குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

18910

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta.
INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS
INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS
"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS
"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE
Low rates of premia. Invested Funds over Rs. 1,47,000,00
Prompt settlement of Claims. Claims paid exceed Rs. 67,000,00
IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.
R. G. DAS & Co, OR K. S. GOPALAYYA
Managers. *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK
BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.
An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.
Every student of History would read this book with pleasure and profit.
Price Rs. 5—8—0. V. P. Charge Extra.
MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப்பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும்,பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,, ,,	2 8 0
தனிப்பிரதி விலை	அணா	0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும்,அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

3/2, தங்கசாலை வீதி, மதராஸ்.

கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப்பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா 4. தபால் செலவு வேறு.

EDUCATIONAL PUBLISHING CO.

Nungambakam, Madras.

கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம் ...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்	ரூ.	5.
ஆரண்ய காண்டம் ...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம் ...	ரூ.	4-8.
சுந்தர காண்டம் ...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலாநிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல்

சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல் ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலாநிலயம்",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)